DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1387
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 4, 2022

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# If CUPE Trade Union continues with their strike they will be breaking the law - Ontario's Education Minister

# CUPE தொழிற்சங்கமானது அவர்களின் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தால், அவர்கள் சட்டத்தை மீறியவர்களாக கருதப்படுவார்கள்

## – ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் பெற்றோர் சமூகத்திற்கு விடுத்துள்ள அறிக்கை



ஒன்றாரியோவின் CUPE தொழிற்சங்கமானது அவர்களின் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தால், அவர்கள் சட்டத்தை மீறியவர்களாக கருதப்படுவார்கள்.

இன்று வியாழக்கிழமை கூட, CUPE தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் தாங்கள் ஆரம்பிக்கப்போகும் வேலைநிறுத்தங்கள் மற்றும் இடையூறுகளை பேச்சுவார்த்தை மேசையிலிருந்து எடுக்க மறுத்தார்கள் நியாயமற்ற சம்பள மற்றும் சலுகைகளை மக்களின் வரிப்பணத்திலிருந்து அவர்கள் ஏதிர்பார்த்தினர்.

இவ்வாறு வியாழக்கிழமை மாலை ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்ரிபன் லெச்சே அவர்கள் ஒன்றாரியோ வாழ் பெற்றோர் சமூகத்திற்கு விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை நடக்கும் என எதிர்பார்க்கப்படும் பாடசாலை பணியாட்களின் வேலைநிறுத்தம் தொடர்பாகவே அவர் தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளார்

(தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)



# Logan Kanapathi MPP for Markham – Thornhill, hosted the Riding Association's Fund Raising Event in Markham

# மார்க்கம் – தோர்ன்ஹில் உறுப்பினர் திரு லோகன் கணபதியின் தொகுதிக் கழகம் நடத்திய நிதி சேர் இராப்போசன விருந்து

கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதியின் உறுப்பினருமான திரு லோகன் கணபதி அவர்களின் தொகுதிக் கழகம் நடத்திய வருடாந்த நிதி சேர் இராப்போசன விருந்துபசாரம் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு மார்க்கம் நகரில் நடைபெற்றது

(தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)

HELP WANTED
Part-time (evenings and Saturdays)
General helper needed for a furniture finishing shop.
Call: 416-636-3655

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Krishna Punniyam
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் தேவை

சமையல் உதவி, வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. பகிரும் அறையொன்றில் தங்கியிருக்கலாம்.
வேலை செய்ய வேண்டிய இடம்: **Maple.** நகரத்தில் **Weston road and Major Mackenzie** சந்திப்புக்கு அருகில்..
அழைக்க வேண்டிய இலக்கம் - *416 428 2141*

## காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.
**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net
1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

## வேலை வாய்ப்பு

**Bathurst and Hwy 7**
பகுதியில்
மாலை நேரம் 3-11
(7 நாட்களும்)
இரவு 11-7 **midnight**
வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
**தொடர்புகளுக்கு:**
**சங்கர் 416-305-0264**

## Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

## Help Wanted

**Part-time**
**(evenings and Saturdays)**
**General helper needed for a furniture finishing shop.**

**Call: 416-636-3655**

## தையல் வேலைக்கு பெண்கள் தேவை

**Scarborough** நகரத்தில் **Markham & Steels** சந்திப்புக்கு அருகில் உள்ள தொழிலகம் ஒன்றுக்கு தையல் வேலைக்கு பெண்கள் தேவை. சாறி பிளவுஸ் மற்றும் சிறுவர்களின் ஆடைகள் ஆகியவற்றை தைக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.
**416 419 3078**
**Call after 6.00 P.M only**


LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

Tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...




இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

உதயன் கதிரோட்டம்

# வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக சிந்தித்து செயற்படும் வடக்கு கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஒரு 'சபாஷ்'

இலங்கையில் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் இனவாதிகளின் கூட்டுச் சதியினால் முன்னர் இல்லாதொழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைப்பு என்னும் முக்கியமான அம்சம் வடக்கு கிழக்கு மாகாண சபையை இரத்து செய்ததன் பின்னர் பேசு பொருளாக இருக்கவில்லை.

இலங்கையின் வடக்கும் கிழக்கும் அதிகாரபூர்வமாக இணைக்கப்பெற்ற ஒரு ஆட்சி பீடமாகக் காட்சியளித்ததை கண்டு பொறாமைத் தீக்குள் அகப்பட்டுக் கொண்ட சதிகாரர்கள் வடக்கு கிழக்கு இணைப்பை அழித்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஆனால் தற்போது யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த முற்போக்குச் சிந்தனை கொண்ட மாணவர்கள் இந்த இணைப்பு மற்றும் ஒற்றுமை தொடர்பாக சிந்தித்து செயற்படும் அளவிற்கு தங்கள் செயற்பாடுகளில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர் மன்றத்தின் செயலகத்தில் ஒன்றாகச் சந்தித்து அவர்கள் வடக்கு கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ்தேசியத்தை இணைக்கு செயற்பாட்டை துரிதப்படுத்தலாம் என்று கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனனர்.

வடக்கு- கிழக்கு மாகாண சபை இல்லா அந்த 'குறையை' இந்த பல்கலைக் கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளமை பாராட்டுக்குரிய செயலாகவே எமக்குத் தோன்றுகின்றது.

மேற்படி சந்திப்புக்களின் போது அவர்கள் வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு மற்றும் இனரீதியான அடக்கு முறைகள் ஆகியவை தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளமை வரவேற்க வேண்டிய ஒன்றாகவே நாம் பாராட்ட வேண்டும்.

வலி. வடக்கில் 2467 ஏக்கர் பரப்பளவினை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இதனை மக்கள் விடுவிக்க கோரி நீதிமன்றத்தில் போராடிக்கொண்டிருக்கின்ற போதிலும் தற்போது அந்த இடத்தினை இராணுவத்தினர் வசப்படுத்துவதற்கான நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. மாணவர் சக்தியாக நாங்கள் இணைந்து இதற்கு எதிராக குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வடக்கில் இருந்து கிழக்கும், கிழக்கில் இருந்து வடக்குக்குமாக இன்றும் இந்த பயணம் தொடர்கிறது. இன்று முதல் வடக்கு, கிழக்கு என்று எந்த பிரிவினையும் இன்றி தமிழர் தேசத்துக்காக தமிழர்களுடைய பிரச்சனைகளுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதை நாம் உணரந்து செயற்பட வேண்டும் என மேற்படி மாணவர்கள் தெரிவித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

# வடக்கு, கிழக்கு என்ற பிரிவினை இன்றி தமிழர் தேசத்துக்காக, ஒன்றாக இணைந்து செயற்பட யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பெற்ற தீர்மானம்




வடக்கு, கிழக்கு என்ற பிரிவினை இன்றி தமிழர் தேசத்துக்காக, தமிழர்களுடைய பிரச்சனைகளுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்..

வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கம் பெற்ற பின்னர் இனவாதிகளால் வடக்கையும் கிழக்கையும் பிரித்து அதன் மூலம் தமிழ்த் தேசியத்தையும் சிதைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இன்னும் தொடரும் நிலையில் தற்போது வடக்கு, கிழக்கு என்ற பிரிவினை இன்றி தமிழர் தேசத்துக்காக, தமிழர்களுடைய பிரச்சனைகளுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அதிகளவு வரவேற்பு கிட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மாணவ ஒன்றிய தலைவரும், கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான தர்சன் இந்த செயற்பாட்டில் முன்னின்று உழைத்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமையன்று நடந்த கருத்தரங்கு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வலி. வடக்கில் 2467 ஏக்கர் பரப்பளவினை இராணுவம் கைப்பற்றியுள்ளது.

இதனை மக்கள் விடுவிக்க கோரி நீதிமன்றத்தில் போராடிக்கொண்டிருக்கின்ற போதிலும் தற்போது அந்த இடத்தினை இராணுவத்தினர் வசப்படுத்துவதற்கான நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. மாணவர் சக்தியாக நாங்கள் இணைந்து இதற்கு எதிராக குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வடக்கில் இருந்து கிழக்கும், கிழக்கில் இருந்து வடக்குக்குமாக இன்றும் இந்த பயணம் தொடர்கிறது. இன்று முதல் வடக்கு, கிழக்கு என்று எந்த பிரிவினையும் இன்றி தமிழர் தேசத்துக்காக தமிழர்களுடைய பிரச்சனைகளுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதை கூறிக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் அன்றைய தினம் யாழ்ப்பாண .பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு ஒன்றியங்களுக்குமிடையிலான எதிர்கால திட்டமிடல்கள், தமிழ் தேசிய பரப்பினுள் மாணவர் ஒன்றியங்களாக ஆற்ற வேண்டிய செயற்திட்டங்கள் போன்ற ஆக்கபூர்வமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஷ் சுவிற்சலாந்தில் "நிறைதமிழ்" பட்டம் வழங்கப்பெற்று கௌரவிக்கபட்டார்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவரும் எழுத்தாளரும் கவிஞருமான அகணி சுரேஷ் அவர்களுக்கு சுவிற்சலாந்தில் "நிறைதமிழ்" பட்டம் வழங்கப்பெற்றது.

சுவிற்சர்லாந்தில் சூரிச் மாநிலத்தில் கணிதக் கற்கை நெறி மையத்தின் நிறுவன அதிபர் மகேந்திரன் அவர்களின் தலைமையில்,கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஷ் அவர்களின் நூல்கள்,பாடல்கள் என்பவற்றின் அறிமுக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு எழுத்தாளர் கல்லாறு சதீ' உரை நிகழ்த்தும்போது புலம்பெயர் தமிழர்களின் தலையாய சமூகமாகக் கனடாத் தமிழ்ச் சமூகம் திகழ்வதாகவும்,ஒட்டு மொத்தத் தமிழ்ச் சமூகத்துக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகம் ஆதாரசக்தியாகத் விளங்குகிறது என்றும் கூறினார்.

பன்னிரெண்டு நூல்களை எழுதி,எட்டு உலக சாதனைகளை நிகழ்த்தி,பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியில்பட்டாதாரியாகவும்,பிரித்தானியாவில் கண ணித்துறையில் முதுமாணியாகவும் பட்டம் பெற்று விரிவுரையாளராக விளங்கும் அகணி சுரே' அவர்களை மிகவும் தகுதியும்,பெறுமதியும் கொண்ட மனிதர் என்று பாராட்டிய எழுத்தாளர் கல்லாறு சதீ' ,சுவி' தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பாக "நிறைதமிழ்" என்று பட்டம் வழங்கிக் கௌரவித்தார். மேலும் பேர்ன் வள்ளுவன் பாடசாலையின் அதிபர் முருகவேள் அகணி சுரேஷின் மொழிசார் ஆற்றல்களைப் பாராட்டியதுடன் பொன்னாடை போற்றிக் கௌரவித்தார் மற்றும் ரதி கமலநாதன், விமலா ஆகியோரும் வாழ்த்துரை வழங்க மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்ற விழா இனிதே நிறைவடைந்தது.

# இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து "சாகித்ய ரத்னா" விருது பெற்ற "ஞானம்" சஞ்சிகையின் ஆசிரியர் தி. ஞானசேகரன்



இலங்கையின் 65 ஆவது அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து "சாகித்ய ரத்னா" விருதைப் பெற்றுக்கொண்டார் "ஞானம்" சஞ்சிகையின் ஆசிரியர் தி. ஞானசேகரன் அவர்கள்

இலங்கை இலக்கியவாதிகளுக்கு உரிய அரச கௌரவங்களை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரச இலக்கிய விருது வழங்கும் விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிகிழமை பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

இலங்கை அரச இலக்கிய ஆலோசனைச் சபை, இலங்கை கலைப் பேரவை, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன அமைச்சு,மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்த 65ஆவது அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் 40 அரச இலக்கிய விருதுகளும் மூன்று "சாகித்ய ரத்னா" விருதுகளும் வழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பபிடத்தக்கது

பேராசிரியர் சந்திரசிறி பள்ளிகுரு (சிங்கள ஊடகம்), சிரேஷ்ட பேராசிரியர் கமனி ஜயசேகர (ஆங்கில மொழி மூலம்) மற்றும் டி ஞானசேகரன் (தமிழ் இலக்கியம் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'சாகித்திய ரத்னா' வாழ்நாள் விருதை வழங்கினார்.

கனடிய செய்திகள்
Canadian News

## If CUPE Trade Union continues with their strike, they will be breaking the law. - Ontario's Education Minister

# CUPE தொழிற்சங்கமானது அவர்களின் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தால், அவர்கள் சட்டத்தை மீறியவர்களாக கருதப்படுவார்கள்

### ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் பெற்றோர் சமூகத்திற்கு விடுத்துள்ள அறிக்கை

ஒன்றாரியோவின் CUPE தொழிற்சங்கமானது அவர்களின் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தால், அவர்கள் சட்டத்தை மீறியவர்களாக கருதப்படுவார்கள்.

இன்று வியாழக்கிழமை கூட, CUPE தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் தாங்கள் ஆரம்பிக்கப்போகும் வேலைநிறுத்தங்கள் மற்றும் இடையூறுகளை பேச்சுவார்த்தை மேசையிலிருந்து எடுக்க மறுத்தார்கள் நியாயமற்ற சம்பள மற்றும் சலுகைகளை மக்களின் வரிப்பணத்திலிருந்து அவர்கள் ஏதிர்பார்த்தினர்.

ஒன்றாரியோவின் இரண்டு மில்லியன் மாணவர்களுக்காக வகுப்பறைகளைத் திறந்து வைக்க, அவர்கள் எம்மை அனுமதிக்கவில்லை. மாணவர்களை இடைநடுவில் விட்டுவிட்டு சென்றுள்ளார்கள். இதை பெற்றோர் உணரவேண்டும்.



இவ்வாறு வியாழக்கிழமை மாலை ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்ரிபன் லெச்சே அவர்கள் ஒன்றாரியோ வாழ் பெற்றோர் சமூகத்திற்கு விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை நடக்கும் என எதிர்பார்க்கப்படும் பாடசாலை பணியாட்களின் வேலைநிறுத்தம் தொடர்பாகவே அவர் தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: தொழிற்சங்கத்தோடு பேச்சுவார்தை நடத்திய எல்லா சந்தர்ப்பத்திலும், நாங்கள் ஒரு வாக்குறுதியை அளித்தோம்:ஒன்றாரியோ பாடசாலை மாணவர்களை வகுப்பில் கற்கும் வண்ணம் வைத்திருக்க தேவையான அனைத்தையும் செய்வோம். நாங்கள் செய்வோம் அந்த வாக்குறுதியை காப்பாற்றுங்கள். என்று.

ஆனால், ஏறக்குறைய 50 சதவீதம் ஊதிய மற்றும் சலுகைகளின் அதிகரிப்பைக் கோரிய பிறகு, CUPE ஏம்மை அச்சுறுத்தியது.

நாம் அவர்களோடு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். அப்போதிருந்து, நாங்கள் மேஜையில் சந்தித்து பேசிக்கொண்டே இருந்தோம். கடைசி நிமிடம் வரை, நாங்கள் நல்ல நம்பிக்கையுடன் இருந்தோம். நியாயமான ஒப்பந்தத்தை எட்டுவதற்கான முயற்சிகள் எடுக்க முயன்றோம். ஆனால் எல்லா நேரத்திலும், CUPE தொழிற்சங்கமானது வேலைநிறுத்தங்கள் மற்றும் இடையூறுகளை நிறுத்த மறுத்தது.

இன்றும் வியாழக்கிழமை பேச்சுவார்த்தைகளின் போது கூட, CUPE தொழிற்சங்கமானது. வேலைநிறுத்தங்கள் மற்றும் இடையூறுகளை தவிர்ப்பதில முடிவு எடுக்க மறுத்தது. இந்த வேலை நிறுத்தத்தின் மூலம் ஒன்டாரியோவின் இரண்டு மில்லியன் மாணவர்களை இந்த தொழிற்சங்கம் நடுத் தெருவில் விட்டு விட்டது. வேறு வழியின்றி மாணவர்களை வகுப்பில் கற்கும் சட்டத்தை நாம் கையில் எடுக்க வேண்டியே உள்ளது.

நாங்கள் இன்று இறுதி பேச்சுவார்த்தைக்கு வந்தது ஏமாற்றம் அளிக்கிறது. எல்லா நேரத்திலும் நாங்கள் ஒரு உடன்பாட்டை எட்டுவோம் என்றுதான் நம்பினோம் மாணவர்களுக்கான உரிமை, பெற்றோருக்கான உரிமை, தொழிலாளர்களுக்கான உரிமை மற்றும் வரி செலுத்துவோர் உரிமை. ஆகியவை பற்றி தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்தோம்.

ஆனால் CUPE தொழிற்சங்கம் அசையவே இல்லை. அவர்கள் பேச்சுவார்த்தையின் போது வேலைநிறுத்தத்தை கைவிட மறுத்துவிட்டனர். எனவே நான் அமைச்சர் என்ற வகையில் நான் ஒன்றை மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

CUPE அவர்களின் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தால், அவர்கள் சட்டத்தை மீறியவர்கள் என்றே கருதப்படுவார்கள்".

இவ்வாறு ஒன்றாரியோவின் கல்வி அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

-------------------------------------

All along, we made a promise: to do whatever it takes to keep kids in class. We will keep that promise.

Let's remember why we're here.

After demanding a nearly 50 per cent increase in compensation, CUPE threatened to strike. Since then, we've been at the table. Right up to the last minute, we've made good faith efforts to reach a fair deal.

But all along, CUPE refused to take strikes and disruption off the negotiation table. Even today, CUPE refused to take strikes and disruption off the table.

For the sake of Ontario's two million students…to keep classrooms open, they've left us with no choice but to pass the Keeping Students in Class Act.

It's disappointing that we got here. All along we had hoped to reach an agreement that's right for students, right for parents, right for workers and right for taxpayers.

But CUPE wouldn't budge. They refused to take a strike off the table.

I want to make something very clear. If CUPE continues with their strike, they will be breaking the law.

## Member of Ontario's Provincial Government Mr. Logan Kanapathi MPP for Markham - Thornhill hosted the Riding Association's Fund Raising Event today in City of Markham

# மார்க்கம் – தோர்ன்ஹில் உறுப்பினர் திரு. லோகன் கணபதியின் தொகுதிக் கழகம் நடத்திய நிதி சேர் இராப்போசன விருந்து

Ontario's Attorney General Hon. Doug Downey was the Chief Guest of the event and he met each and every guest and invitee of the night.








கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் மார்க்கம் - தோர்ன்ஹில் தொகுதியின் உறுப்பினருமான திரு. லோகன் கணபதி அவர்களின் தொகுதிக் கழகம் நடத்திய வருடாந்த நிதி சேர் இராப்போசன விருந்துபசாரம் நேற்று முன்தினம் புதன்கிழமை (03) இரவு மார்க்கம் நகரில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக ஒன்றாரியோ மாகாணத்தின்நீதி அமைச்சரும் சட்ட மா அதிபருமான Hon. Doug Downey அவர்கள் கலந்து கொண்டு லோகன் கணபதி அவர்களை பாராட்டி உரையாற்றினார். அங்கு கலந்து கொண்ட ஏனைய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களும் மார்க்கம் நகரசபையின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தவர்களும் திரு. லோகன் கணபதி அவர்களின் சேவைகளை பாராட்டினர். அவர் மார்க்கம் நகரசபை அங்கத்தவராக இருந்த காலத்தில் ஆற்றிய மக்கள் சேவையைப் போன்றே மாகாணப் பாராளுமன்றத்திலும் தனது சேவையை ஆற்றி வருவதாக புகழாரம் சூட்டினார்கள்.

# பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பாண்டியன்குளம் கரும் புள்ளியான் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் மக்கள் சந்திப்பு சனிக்கிழமை (29) மாலை நடைபெற்றது.

இதன் போது தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அரசியல் நிலவரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதோடு, கிராமத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



இதன் போது புலம்பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்திருந்த குறித்த கிராமத்தைச் சேர்ந்த ராசன் அவர்களினால் மூன்று குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிக்காக காசோலைகளும் வழங்கப்பட்டது.




# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் 90 ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம்

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 90ம் நாள் கவனயீர்ப்பு நிகழ்வு சனிக்கிழமை (29) காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச ஸ்கந்தபுரம் சந்தியில் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச ஸ்கந்தபுரம் சந்தியில் இடம் பெற்றது. இதன் போது பிரதேசத்தின் விவசாய சங்கத்தினர், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும்,நடமாடுவது எங்கள் உரிமை,பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோஷங்களை எழுப்பியவாறு ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை முன்பாக தங்களின் உரிமை சார்ந்த கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா வின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நினைவேந்தல் சனிக்கிழமை (29) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதன்போது கௌரி சங்கரி தவராசா வின் உருவப்படத்திற்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா எழுதிய "கௌரி நீதியின் குரல்" புத்தகமும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் பாரியாராவார்.

அவர் நாட்டில் அதிகம் பேசப்படுகின்ற பல வழக்குகளில் முன்னிலையாகி - வாதாடி சாதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த மாதம் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா எழுதிய கௌரி நீதியின் குரல் நினைவு நூல் வெளியீட்டு விழா கொழும்பில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இந்தியா செய்திகள்
India News

# தூத்துக்குடியில் "ஓலைப்புட்டு" இலங்கைத்தமிழர் பாரம்பரிய உணவகம் – கனிமொழி திறந்து வைத்தார்




தூத்துக்குடியில் முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் தற்சார்பு நிலையை மேம்படுத்தும் நோக்கில், அவர்களுக்கென உணவகம் அமைத்துத் தரும் நோக்கில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி முன்னெடுப்பின் பலனாக, சில தொண்டு அமைப்புகள் மூலம், தூத்துக்குடி மாநகராட்சி வணிக வளாகத்தில் "ஓலைப்புட்டு - இலங்கைத் தமிழர் பாரம்பரிய உணவகம்" அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகத்தை, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, "ஆபர்" அமைப்பின் நிறுவனர் சந்திரஹாசன், யூஎன்ஹெச்சிஆர் பொறுப்பாளர் வளன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை துணை இயக்குநர் ரமேஷ், மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இம்முயற்சியைச் சாத்தியப்படுத்திட உதவிய ஜிஆரடு, ஓட்டல்ஸ், ஹாட்பிரட்ஸ் மகாதேவன் உள்ளிட்ட அனைவருக்கும் கனிமொழி கருணாநிதி கூறினார்.

# பிரதமர் மோடி "குப்பை கொட்டிய" குஜராத்தில் தொங்கு பாலம் அறுந்து ஆற்றுக்குள் விழுந்ததில் 40 பேர் பலி



குஜராத்தின் மோர்பி நகரில் ஓடும் மச்சு ஆற்றின் மீது ஏறக்குறைய நூற்றாண்டு பழமையான தொங்கு பாலம் உள்ளது. இந்நிலையில் சாத் பூஜையில் கலந்துக் கொள்வதற்காக ஏராளமான மக்கள் தொங்கு பாலம் மீது நடந்து சென்றுள்ளனர். இந்த பாலத்தின் மீது சுமார் 400 பேர் இருந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், அக். 30 மாலை பாலம் இடிந்து விழுந்தது. இதனால், ஆற்றில் பலரும் மூழ்கினர். இதுகுறித்து தகவல் தெரியவந்ததை அடுத்து ஆற்றில் விழுந்த பலரை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.

இதில் தற்போதைய நிலவப்படி 40 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மோர்பியில் இடிந்து விழுந்த பாலத்தின் புனரமைப்பு பணிகள் முடிந்து கடந்த 5 நாட்களுக்கு முன்புதான் பிரதமர் மோடியால் மீண்டும் திறக்கப்பட்டது.

பொது மக்களின் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்ட பாலம் பாரம் தாங்காமல் அறுந்து விழுந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோர்பியில் பாலம் இடிந்து விழுந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு பிரதமர் மோடி ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிதியுதவி அறிவித்துள்ளார்.



மீட்பு பணிகளை துரிதப்படுத்த குஜராத் அரசுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார். தொடர்ந்து, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.4 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் நிதி வழங்கப்படும் என்று குஜராத் மாநில அரசு அறிவித்துள்ளது.

# இந்தியாவின் "எஃகு மனிதர்" ஜம்ஷெட் ஜே இரானி மரணம்


இந்தியாவின் எ.்.கு மனிதர் என்று அழைக்கப்படும் ஜம்ஷெட் ஜே இரானி மரணம் அடைந்தார்.

நாட்டின் எ.்.கு மனிதர் என்று அழைக்கப்படும் டாக்டர் ஜாம்ஷெட் ஜெ இரானி திங்கள்கிழமை (31) இரவு ஜாம்ஷெட்பூரில் காலமானார். அவருக்கு வயது 86. இந்த தகவலை டாடா ஸ்டீல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து டாடா ஸ்டீல் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பத்மபூஷன் டாக்டர் ஜாம்ஷெட் ஜே. இரானியின் மறைவு குறித்து ஆழ்ந்த வருத்தம் அடைந்துள்ளோம். அவர் இந்தியாவின் ஸ்டீல் மேன் என்று அன்போடு அழைக்கப்படும் நபர். அவருடைய குடும்பத்தினருக்கு டாடா ஸ்டீல் குடும்பம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது" என்று தெரிவித்துள்ளது.

வாழ்க்கை வரலாறு

ஜி.ஜி. இராணிருகுர்ஷித் இரானியின் மகனாக ஜம்ஷெட் ஜே இரானி ஜூன் 2, 1936ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ந் தேதி பிறந்தார். அவர் இங்கிலாந்தில் உள்ள ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தில் 1963இல் உலோகவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். பத்ம விபூஷன் ஜாம்ஷெட் இரானி 1963-ல் பிரிட்டிஷ் இரும்பு மற்றும் எ.்.கு ஆராய்ச்சி சங்கத்தில் தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆனால் அவரது கனவு எப்போதும் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதாக இருந்தது. அவர் 1968 இல் இந்தியா திரும்பி, டாடா இரும்பு மற்றும் எ.்.கு நிறுவனத்தில் (டாடா ஸ்டீல்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை இயக்குநரின் உதவியாளராக பணிபுரிந்தார். அவர் 1985 இல் டாடா ஸ்டீல் நிறுவனத்தின் தலைவராக பதவியேற்றார். 43 ஆண்டுகள் அவர் டாடா நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிலும் பல முக்கிய பொறுப்புகளை வகித்தவர். டாடா ஸ்டீல் குழுமத்தில் இருந்து இரானி ஜூன் 2011 இல் ஓய்வு பெற்றார்.

# கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை பராமரிப்பு பணி மழையால் பாதிப்பு



கன்னியாகுமரி கடல் நடுவே கடந்த 2000-ம் ஆண்டு 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. இந்த சிலைக்கு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பராமரிப்பு பணிகள் நடைபெறுவது வழக்கம்.

இதன்படி உப்புக்காற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சிலை முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு சிலையில் உள்ள உப்புத்தன்மை நீக்கப்பட்டு பின்னர் ரசாயன கலவை பூசப்படும். இதன் மூலம் உப்புக்காற்றினால் சிலை சேதமடையாமல் நீண்ட காலம் நீடித்து நிற்கும்.

இதன்படி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 6-ந்தேதி திருவள்ளுவர் சிலை பராமரிப்பு பணி தொடங்கியது. சிலையை சுற்றிலும் இரும்பு சாரங்கள் அமைக்கப்பட்டு சுமார் 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தினமும் இந்த பராமரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

உப்புத் தன்மையை அகற்றுவதற்காக சிலையை சுற்றிலும் காகிதம் ஒட்டும் பணி நடைபெற்றது. ஒட்டப்பட்ட காகிதத்தை ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி உப்பு படிந்திருக்கும் அளவு கண்டறியப்படும். பி.எச். மதிப்பு 7 என்ற அளவில் இருந்தால், அதன் பின்னர் ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரசாயன கலவை சிலையின் மீது பூசப்படும்.

இந்தநிலையில் கடந்த சில தினங்களாக பெய்து வந்த மழை காரணமாக சிலையின் மீது ஒட்டப்பட்டு இருந்த காகிதங்கள் மழையில் நனைந்து சேதமடைந்து விட்டன. இதன் காரணமாக மழை குறைந்த பின்னர் மீண்டும் காகிதம் ஒட்டப்பட்ட பின்னர் பராமரிப்பு பணிகள் தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் இந்த மாதம் 6-ந்தேதி முடிய வேண்டிய சிலை பராமரிப்பு பணி மேலும் ஒரு மாத காலம் தாமதமாகலாம் என்று சுற்றுலா வளர்ச்சிக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே கன்னியாகுமரியில் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும். ஆனால் கடந்த 5 மாதங்களாக திருவள்ளுவர் சிலையை பார்வையிட முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலையை பார்வையிட மேலும் ஒரு மாதம் தாமதமாகலாம் என்று தெரிய வருகிறது.

# தமிழ்நாடு மீனவர்கள் 3 பேரை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது

## "10 ஆண்டுகள் இலங்கை கடல் எல்லையில் நுழையக்கூடாது" என்று நிபந்தனை

தமிழ்நாடு மீனவர்கள் 3 பேரை நிபந்தனைகளுடன் விடுவித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவம் அடிக்கடி நடந்த வண்ணம் உள்ளது. கடந்த 20ஆம் தேதி மீன்பிடிக்கச் சென்ற புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 3 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையால் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இந்த வழக்கை விசாரித்த இலங்கை ஊர்க்காவல்துறை நீதிமன்ற நீதிபதி, தமிழ்நாடு மீனவர்கள் 3 பேரையும் நிபந்தனையுடன் நேற்று விடுதலை செய்து உத்தரவிட்டார். மேலும் 10 ஆண்டுகள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய கூடாது என நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது. ஊர்காவல்துறை நீதிமன்ற உத்தரவின்பேரில் யாழ்ப்பாணம் சிறையில் இருந்த 3 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். விடுதலை செய்யப்பட்ட 3 மீனவர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் விரைவில் தமிழகத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல; தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்

**- பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு**

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப்பொங்கலே தமிழர்களின் தேசியப்பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகைமாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல; அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டுமுதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிபரம் வருமாறு;

பூமி சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன. கடும் வறட்சி, காலம்தப்பிய பெருமழை, வேகமெடுக்கும் சூறாவளிகள், கடல்மட்ட உயர்வு, உயிரினங்களின் அழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். ,தனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமிலவாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டிய கட்டாயநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப்பொருத்தமான மாதமாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பினைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது தொல்வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்து, அவற்றை உயிருள்ள நினைவுச்சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.



தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில், கார்த்திகைமாத மரநடுகை என்பது தமிழ்த்தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும். எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன்கூடிய ஒரு தமிழ்த்தேசியச் செயற்பாடாகவும் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப்பொங்கலே தமிழர்களின் தேசியப்பொங்கல் திருநாளாகப் கொண்டாடப்படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகைமாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல; அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்குத் தமிழ்த் தேசிய உணர்வுள்ள ஒருவர் தலைவராக வர வேண்டும்"



## சுமந்திரனின் தன்னிச்சையான முடிவு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பாதிப்பு

**ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா**

"சுமந்திரனின் தன்னிச்சையான முடிவுகள் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது தனிப்பட்ட கம்பனி அல்ல. மக்களுடைய கட்சி. மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி." - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை காலை அவர் நடத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கட்சி முடிவு என்பது மத்திய குழு அழைக்கப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு முடிவு எடுக்கப்படும். அந்த முடிவே இறுதியான முடிவாக இருக்கும். ஆனால், சுமந்திரனுடைய கருத்துக்கள் இப்போது தன்னிச்சையாக அமைகின்றது. அது கட்சி முடிவு அல்ல. இவ்வாறான முடிவு கட்சிக்கு மட்டும் பாதிப்பு அல்ல.

தமிழ் மக்களுக்கும் மண்ணுக்கும் நமது நிலத்துக்கும் மொழிக்கும் இது பாதிப்பு. அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அண்மையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது சுமந்திரன் வாக்களிக்காமல் சபையிலிருந்து வெளியேறி சென்று விட்டார்.

இந்த முடிவு கட்சியில் எப்போது எடுக்கப்பட்டது? அவரே தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கான தெரிவு நாடாளுமன்றில் இடம்பெறும்போது வாக்களிப்பில் நடுநிலை வகிப்பது முதுகெலும்பு இல்லாதவர்களின் செயல் என்று சுமந்திரன் கூறினார். அவ்வாறு கூறியவர் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கான வாக்களிப்பைப் புறக்கணித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்ப்பதற்காகவே சுமந்திரன் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கான வாக்களிப்பைப் புறக்கணித்தார். சம்பந்தன் எப்போது விலகுவார், அந்தக் கதிரையை பிடிப்போம் என்று பலர் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். நான் அவ்வாறு இல்லை.

கட்சிக்குள் கொள்கைகள் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக மாறுமாக இருந்தால், நான் கட்சியை விட்டு வெளியேறுவேன். கட்சித் தலைமை சரியான தீர்மானங்களை எடுக்காவிட்டால், இவ்வாறு பலர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து, கட்சியையும், மக்களையும் திசை திருப்பி விடுவார்கள்.

கட்சியில் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். அந்தக் கூட்டுப் பொறுப்பின் முடிவுகளுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனின் தன்னிச்சையான முடிவுகளால்தான், இலங்கைத் தமிழரசுக் கட்சி கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதைக் கடந்த பல ஆண்டுகளாகக் கூறிக் கொண்டு வருகின்றேன்.

இது தனிப்பட்ட கட்சி அல்ல. இது மக்களுடைய கட்சி. இது மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி. அந்தக் கட்சியினுடைய அங்கத்தவர்கள் யாராக இருந்தாலும் சரி கட்சித் தலைமையை மதிக்க வேண்டும். இந்த மண்ணுக்கும் என்னுடைய தாய்மொழிக்கும் என்னால் செய்யக்கூடிய சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கமே தவிர வேறெந்த நோக்கமும் தனிப்பட்ட இலாபமும் எனக்குக் கிடையாது. என்னுடைய சொத்துக்களை கௌரி சங்கரி தவராசா எனும் அறக்கட்டளை மூலம் மக்களுக்காக வழங்கப் போகின்றேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய பட்டியல் தருமாறு நான் கேட்கவில்லை. ஆனால், தேசியப்பட்டியலில் உள்வாங்கப்பட்டேன். தேசியப்பட்டியலில் எனது பெயர் முதலாவதாகக் காணப்பட்டது.

எனினும், அடுத்த நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகத்தை அழைத்து, அம்பிகா சற்குணநாதனுடைய பெயர் முதலாவதாக உள்வாங்கப்பட்டுள்ளது என அறிவித்தார்.

பின்னர் சுமந்திரன், சம்பந்தனைச் சந்தித்து ஒரு முடிவு எடுத்து தேசியப்பட்டியல் அம்பாறையை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற தவராசா கலையரசனுக்கு கொடுப்பதாக தீர்மானித்து அதனையும் ஊடகங்களை அழைத்து அறிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடாது என்பதில் சுமந்திரன் தீவிரமாக இருந்தார்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்குத் தமிழ்த் தேசிய உணர்வுள்ள ஒருவர் தலைவராக வர வேண்டும்" என்றார்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

கனடியத் தேசிய வீரர் நினைவு நாள் நவம்பர்-11.11.2022.

நவம்பர்11.2022 வெள்ளிக்கிழமை அன்று, கனடியத் தேசிய வீரர் நினைவு நாள் ஆகும். கனடா வாழ் மக்கள் அனைவரும் கனடியத் தேசிய வீரர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செய்யும் இந்த வணக்க நாள், ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரப்படுவதை நாம் அனைவரும் அறிவோம். 11.11.2022 அன்று, கனடா வாழ் அனைத்து மக்களோடும், தமிழ் மக்கள் அனைவரோடும் இணைந்து நின்று கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சொந்த மண்ணை விட்டுப், புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் ஈழத் தமிழ் மக்களாகிய எமக்குக் கனடிய மண் ஆதரவு தந்து வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. கனடா வாழ் ஈழத் தமிழர்களாகிய நாம், இங்கு வாழும் பல்லினப் பண்பாட்டு மக்களோடு வாழும் எமது நல் வாழ்வுக்காகக் கனடிய மண்ணை மதித்துப் போற்றுகின்றோம். நன்றியுணர்வோடும் வாழ்கின்றோம். கனடிய மண்ணுக்காகத் தாயக உணர்வோடு, தமது தேசியக் கடமையைச் செய்த கனடியத் தேசிய வீரர்கள் அனைவரையும் நாம் பொப்பி மலர் அணிந்து, வணங்கி நிற்கின்றோம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், 11.11. 2022 வெள்ளிக்கிழமை அன்று, கனடா வாழ் ஈழத் தமிழ் மக்கள் அனைவரோடும் இணைந்து நின்று கனடியத் தேசிய வீரர் நினைவு நாளை நினைவு கூர்கின்றது. நன்றி வணக்கம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம் 647 619 3619
ctro@tamilremembrance.com.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான தானியங்கள் வழங்கி வைப்பு





கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேட்டுநில பயிர் செய்கைக்கான தானியங்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (28) காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேசச் செயலாளர் எஸ்.கிறிஸ்கந்த குமார் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து, பயறு, போன்ற தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் நிகழ்வில் மாவட்ட விவசாய பணிப்பாளர் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 860 விவசாயிகளுக்கு உளுந்து, பயறு உள்ளிட்ட மேட்டு நில பயிர் செய்கைக்கான தானியங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 40 விவசாயிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து பயறு வழங்கி வைக்கப்பட்டது.

# மன்னாரில் சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கையாள்வது தொடர்பாக கலந்துரையாடல்



மன்னாரில் அதிகரித்து வரும் சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது மற்றும் கையாள்வது தொடர்பான கருத்தமர்வு வெள்ளிக்கிழமை (28) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.


மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளை தடுப்பது மற்றும் சிறுவர் பெண்களுக்கு ஏற்படும் வன்முறை சம்பவங்களை எவ்வாறு கையாள்வது தொடர்பான கருத்துக்கள் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுவர் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மெசிடோ நிறுவனத்திற்கான யுனெப்ஸ் திட்ட இணைப்பாளர் ஜான்சன் சூசை, மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




- மன்னார் நிருபர் (28-10-2022)

# பாணுக்குள் "குண்டூசி" யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் சிக்கியது



யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் உள்ள கடையில் இருந்து வாங்கிய பாணுக்குள் மூன்று குண்டூசிகள் மீட்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி பகுதியில் உள்ள கடை ஒன்றில் வியாழக்கிழமை (27), குடும்பஸ்தர் ஒருவர் றோஸ் பாண் வாங்கியுள்ளார்.

அந்த பானை வீட்டுக்கு கொண்டு சென்று தமது பிள்ளைகளுக்கு வழங்கிய போதே, பாண் ஒன்றினுள் மூன்று குண்டூசிகள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பாக அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சுகாதார பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கொட்டும் மழைக்கு மத்தியில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் ஆரம்பம்



**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய சிரமதான பணிகள் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் நவம்பர் 27ஆம் தேதி இடம்பெற உள்ள நிலையில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணி குழுவினரால் துயிலும் இல்ல வளாகம் சிரமதானம் செய்கின்ற வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டது.




காலை ஒன்பது முப்பது மணி அளவில் தேராவில் துயிலும் இல்ல வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் மக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு மற்றும் மாவீரர்களுடைய பெற்றோர் நலம் விரும்பிகள் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் இணைந்து கொண்டு இந்த சிரமதான பணியை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற சூரசம்ஹார நிகழ்வு

தமிழ் கடவுளான முருகப் பெருமானை நோக்கி அனுஷ்டிக்கப் படுகின்ற விரதங்களில் மிகவும் முக்கியமான விரதம் கந்த சஷ்டி விரதமாகும்.

இந்த விரதம் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்று இறுதி நிகழ்வான சூரசம்ஹார நிகழ்வுகள் பல ஆலயங்களில் சிறப்புற நடைபெற்றது.

சரவணப் பொய்கையில் ஆறு திரு முகங்களுடன் அவதரித்த முருகனை நோக்கி ஆறு தினங்களுக்கு இந்த விரதம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த கந்த சஷ்டி விரதத்தின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை (30) முருகப் பெருமான் மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற ஆலயங்களில் சூரன் போர் இடம்பெற்றது.

மன்னாரில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ சூரசம்ஹார நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மேளதாளம், வாத்திய இசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலய வளாகத்தில் சூரனுடன் போர் செய்து சூரனை வதம் செய்து பக்த அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் கழிவு மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் இருந்து கண்ணிவெடி மீட்பு



மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாப்பாமோட்டை பகுதியில் இருந்து மன்னார் நகரில் உள்ள சாவக்கட்டு மயானப் பகுதிக்கு வியாழக்கிழமை (27) கழிவு மண் ஏற்றி வந்த உழவு இயந்திர பெட்டிக்குக்குள் மண்ணுடன் வெடிக்காத நிலையில் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் வேலை செய்த நபர் ஒருவரால் கண்ணிவெடி உள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இவ்விடயம் தொடர்பாக உடனடியாக மன்னார் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் பொலிஸார் குறித்த பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலும் நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று விசேட அதிரடிப்படையின் தலைமையில் கண்ணிவெடி செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மன்னார் நிருபர்

# மாங்குளத்தில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் திறந்து வைப்பு!

ஜெகதீஸ்வரன் டிஷாந்த்
ஊடகவியலாளர்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமுர்த்தி ஆரோக்கிய உணவக திட்டத்தின் கீழ் A9 வீதி மாங்குளத்தில் அமையப்பெற்ற சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் வெள்ளிக்கிழமை (28) காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ப.ஜெயராணி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த ஆரோக்கிய உணவகத்தினை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர்.

மேலும் இந் நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு.முபாரக் சிறப்பு விருந்தினராகவும், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, கட்டடத்தின் நாடாவினை வெட்டி குறித்த சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து அதிதிகளின் உரைகளைத் தொடர்ந்து, குறித்த சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் அதிதிகளால் பார்வையிடப்பட்டது.

நாடாளாவிய ரீதியாக 21 சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 20வது மையமாக இது இன்று இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளிகளின் உள்ளூர் மூலப்பொருட்களினைக் அடிப்படையாகக் கொண்டு பாரம்பரியமான ஆரோக்கியமான உணவினை, வருமானத்தினை அடையும் வகையில் இச் செயற்றிட்டம் அமைந்துள்ளது.

மேலும் குறைந்த விலையில், ஆரோக்கியமான தரமான உணவினை பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

நான்கு மில்லியன் செலவில் அமையப்பெற்ற இச் செயற்றிட்டத்தினை மாங்குளம் சமுதாய அடிப்படையிலான வங்கி சங்கம் கண்காணிப்பினை மேற்கொள்ளும்.



குறித்த திட்டத்தின் கீழ் பத்திற்கும் மேற்பட்ட நேரடி பயனாளிகளும், சமுர்த்தி உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தமது உற்பத்திகளின் சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்வர்.

மேலும் இவர்களுக்கான துறைசார்ந்த பயிற்சிகள் ஏலவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள சிரேஷ்டமுகாமையாளர், பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர், பிரதேச சபை உத்தியோகத்தர், மாங்குளம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள், மாங்குளம் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மற்றும் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.








Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900






# காணிகளை அபகரித்துக் கொண்டு உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது: சிவசக்தி ஆனந்தன்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

விவசாயிகளுக்கு நெருக்கடிகளை கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது. இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கட்சி பேதமின்றி கொண்டு செல்ல வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட விவசாயிகளுடன் இடம்பெற்ற திறந்த கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசியும் எந்த தீர்வும் இல்லை.

அதனால் நாங்கள் இது தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. கட்சி விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

ஏனைய மாவட்டங்களில் பல கட்சிகள் இருந்தாலும், அவர்கள் தமக்கான நிகழ்ச்சி நிரலை கொண்டிருந்தாலும் ஒன்றாகவே பயணிக்கிறார்கள். தமிழ் மக்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமை பிரேரணை உள்ளிட்ட எந்த விடயத்திலும் அவர்கள் ஒற்றுமையாக செயற்படுகிறார்கள்.

ஆகவே வன்னி மாவட்ட மக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது.

ஜனாதிபதி அவர்களிடம் விவசாயப் பிரச்சனைகளை முன்வைக்க வேண்டும். சில பிரச்சனைகளை ஜனாதிபதி அவர்களால் தான் தீர்க்க முடியும். ஏனெனில் நில அபகரிப்பு தொடர்பாக சில திணைக்களங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. பொது மக்களின் காணிகளை சுவீகரிப்பதில் இருந்து அவர்களை கட்டுப்படுத்த முடியாது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற அடிப்படையில் அவரிடம் முன்னிலைப்படுத்தி கொடுக்க முடியும். குறிப்பிட்ட காலப்பகுதியில் அதனை தீர்க்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு நெருக்கடிகளை கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது. இந்த விஷயத்தில் கட்சி பேதமின்றி ஜனாதிபதியுடன் பேசி தீர்வு காண வேண்டும்.

ஒரு காலவரையறைக்குள் தீர்க்க முடியாவிட்டால், மக்களுடன் இணைந்து போராட வேண்டும். அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியை தெரிவு செய்வது தமிழ், முஸ்லிம் மக்களின் கைகளிலேயே உள்ளது.

தென்னிலங்கை கட்சிகள் பிளவுபட்டுள்ளது. எமது விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்க்காது விடின் விவசாயிகளிடம் இருந்து பாடத்தை பெற வேண்டி வரும்.

நாமும் விவசாயிகளுடன் இணைந்து போராட வேண்டும். எங்களுடைய பிரச்சனைகளை பேரம் பேசாத வரை நாம் தொடந்தும் அடக்குமுறைக்குள் தான் இருக்க முடியும். எனவே எமது கோரிக்கையை குறித்த காலத்திற்குள் தீர்க்க முடியாவிட்டால் வீதியில் இறங்க வேண்டி வரும் எனத் தெரிவித்தார்.



# முகமாலையில் இடம்பெற்ற விபத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் 25 பேர் காயம்

முகமாலையில் 15-10-2022 அன்று இடம்பெற்ற விபத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் 25 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் பயணித்துக்கொண்டிருந்த பேருந்தின் மீது டிப்பர் மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# மன்னாரில் இந்திய முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலட்டை பண்ணை களுக்கு தேவையான குஞ்சு பொரிக்கும் நிலையங்கள்



இந்திய தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலட்டை பண்ணை களுக்கு தேவையான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் 14-10-2022 வெள்ளிக்கிழமை மாலை மன்னாரில் இடம் பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மன்னார், ஓலைத்தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள நக்டா நிறுவனத்தினால் செயற் படுத்தப்படுகின்ற கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

வடக்கில் அமைக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும், கடலட்டை குஞ்சு பராமரிக்கும் நிலையங்களை நவீன முறையில் அமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்வதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன் வந்திருந்தனர்.

இந்நிலையில் நக்டா நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் செயற்படுத்தப்படுகின்ற, ஓலைத்தொடுவாய் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்திற்கும் இந்திய முதலீட்டாளர்களின் தொழில் நுட்பங்களை உள்வாங்கி, அதன் உற்பத்தி திறனை அதிகரிக்க விரும்பிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முதலீட்டாளர்களை ஓலைத் தொடுவாய் குஞ்சு கருத்தரிப்பு நிலையத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இந்தக் கலந்துரையாடலில், கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் மற்றும் குஞ்சு பராமரிக்கும் நிலையம் போன்றவற்றிற்கான இந்திய தனியார் முதலீட்டாளர்களின் அனுபவத்தினையும் நவீன தொழில் நுட்பத்தினையும் பயன்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கும் நோக்கில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், பிரதேச மக்களால் உருவாக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சுகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை மன்னாரில் கோந்தைப்பிட்டி எனும் இடத்தில் உள்ள இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை பயன்படுத்துவதற்கு இரண்டு சமூகங்கள் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில் மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களின் பங்குபற்றலுடன் விரிவான கலந்துரையாடலை நடத்தி, நிரந்தரமான தீர்வினை சுமூகமாக அமுல்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் பஸ் மோதி முதியவர் பலி – சாரதி, நடத்துனர் தலைமறைவு



மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகம் அருகில் வீதியில் நின்று கொண்டிருந்த முதியவர் மீது பஸ் மோதியதில் சாத்தான்குளம் பகுதியை சேர்ந்த 74 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் (18) செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தின் போது பலத்த காயமடைந்த நிலையில், குறித்த வயோதிபர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த விபத்து சம்பவத்தை தொடர்ந்து பஸ் சாரதியும் நடத்துனரும் விபத்தின் பின்னர் அவ்விடத்தில் இருந்து தலைமறைவாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும், பிரதேச மக்களும் விபத்து இடம்பெற்ற இடத்தில் முரண் பட்டதால், விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.



அதன் பின்னர் குறித்த பஸ் சம்பவ இடத்திலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மன்னார் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# துணுக்காய் பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா!

இலங்கை செய்திகள் Sri Lanka News



**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பண்பாட்டு பேரவையும் இணைந்து நடாத்தும் பண்பாடு பெருவிழா இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்கள் பிரதேச மக்களால் பாண்பாட்டு நடனங்கள் மற்றும் வாத்தியங்கள் முழங்க மண்டபத்திற்கு வெகு விமர்சையாக அழைத்து வரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் விருந்தினர்களைவரவேற்கும் முகமாக மல்லாவி நர்த்தனாலயா மாணவிகளினால் வரவேற்பு நடனமும் கோலாட்ட நடனங்களும் வழங்கப்பட்டன. இதேவேளை கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

பிரதேச செயலாளர் ச.லதுமீரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் , சி.ராஜமல்லிகை (பிரதிப்பணிப்பாளர் - பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாணம்).

கை - பிரகாஸ் - வவுனிக்குளம் நீர்பாசன பொறியியலாளர் - மற்றும் கௌரவ விருந்தினராக பரமு தணிகாசலம் - மூத்த கலைஞர், துணுக்காய் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் கிராம மக்கள் ,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்







# "வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்"

## 89 வது நாள் ஆர்ப்பாட்டம் செங்கலடி களுவன்கேணியில் முன்னெடுப்பு!



"வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் தொனிப் பொருளில் நடைபெறும் 100 நாட்கள் செயல் முனைவின் 89 ஆவது நாளான வெள்ளிக்கிழமை (28) மட்டக்களப்பு - செங்கலடி களுவன்கேணி பகுதியில் இடம்பெற்றது.

"வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு" - ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் களுவன்கேணி பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போது அங்கு திரண்டிருந்த மக்கள் "எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்", "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "நடமாடுவது எங்கள் உரிமை", "பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை", "ஒன்று கூடுவது எங்கள் உரிமை", "எங்கள் நிலங்களை அபகரிக்காதே" போன்ற பல கோரிக்கைகளை கோ'ங்களை எழுப்பினர்.

பதாகைகளை ஏந்தியவாறு கவணயீர்ப்பில் ஈடுபட்ட இவர்கள் களுவண்கேணி குளணி பொதுக் கட்டிடத்தில் இருந்து ஆர்ப்பாட்ட பேரணியாக களுவண்கேணி குளணி சந்தி வரை சென்றனர்.

பெண்கள் அமைப்புக்கள், காணாமல் போனோரின் உறவுகள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (28-10-2022)



# தளபதி அமரர் அ.அமிர்தலிங்கத்தின் சிந்தனையைக் கடைப்பிடிக்கின்றாரா ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா?

இலங்கை செய்திகள் Sri Lanka News



சுமார் 45 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்கள் "முளை" விடத் தொடங்கிய காலம். அப்போது தமிழர் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதனால் ஆத்திரம் அடைந்த தமிழ் இளைஞர்கள் அவ்வாறான அமைப்பாளர்களையும் அவர்களின் பின்னால் திரியும் தொண்டர்களையும் தாக்கத் தொடங்கினார்கள்.

அதனை அறிந்த தளபதி அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் இளைஞர் பேரவையைச் சோர்ந்த இளைஞர்களிடம் அவ்வாறான தாக்குதல்கள் எதுவும் நடத்த வேண்டாம் என்றும் அந்த அமைப்பாளர்களை உங்கள் ஊரில் அல்லது இல்லங்களில் நடைபெறும் நல்ல கெட்ட காரியங்களுக்கு அழைக்காதீர்கள். அப்போது அவர்கள் தங்களை தமிழர் சமூகம் ஒதுக்குகின்றது என்பதை உணர்ந்து கொள்வார்கள் ஏன்று உணர்ந்த கொள்வார்கள்" ஏன்றார்.

அவ்வாறான சிந்தனையைக் கடைப்பிடிக்கின்றாரா ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா? என்று கேட்கும் அளவிற்கு அண்மைக்கால சம்பவங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா அவர்களின் மறைந்த துணைவியார் அவர்களின் நினைவு தின வைபவத்திலும் சுமந்திரனைக் காணவில்லை. இது போன்று சுமந்திரன் தொடர்பான அரசியல் விமர்சனங்களை மிகவும் காட்டமாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா அவர்கள் வைத்து வருகின்றார்கள் என்பதையும் கட்சி உறுப்பினர்கள் நன்கு அவதானித்து வருகின்றார்கள்.

இதே வேளை "இனியும் சுமந்திரன் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம்" என்ற சிறீதரன் சிவஞானம் எம்பி அவர்களின் கருத்தை முற்று முழுதாக ஏற்றுக்கொள்வதாக இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்புகிளை தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் (20.10.2022) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கூறிய இந்த விடயத்தினை நான் கட்சிக்குள் உள்வாங்கப்பட்ட பின்னர் 2010 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 12 ஆண்டுகளாக தொடர்ச்சியாக கூறி வருகிறேன்.

கட்சி என்று கூறும் போது கட்சிக்குள்ளே ஒரு முடிவு எடுக்கும் பொழுது அந்த முடிவு அனைவராலும் சேர்த்தெடுக்கப்பட வேண்டும்.

தலைவர் ஒரு முடிவு எடுத்தால் கூட கட்சியில் உள்ளவர்கள் மத்தியிலும் கேட்கப்பட வேண்டும். அது மத்திய குழுவில் உள்ள நாடாளுமன்ற குழுவாக இருந்த கூட அங்கேயும் ஒன்றிணைந்து முடிவெடுக்கப்பட வேண்டும்.

எந்தவொரு முடிவும் ஒரு குழுவான முடிவாக இருக்க வேண்டும். இதனை தொடர்ச்சியாக நான் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றேன். எந்த விடயத்தை எடுத்தாலும் தன்னிச்சையான முடிவினை எடுப்பதை எப்போது நிறுத்துகிறார்களோ அப்பொழுதுதான் கட்சி நிலைத்து நிற்கும்.



இலங்கை தமிழரசு கட்சி என்பது தனியார் கம்பனியல்ல மக்களின் கட்சி மக்களின் உரிமை பெற்றெடுப்பதற்காக இந்த வீட்டுக்குள் வந்து குந்தியிருக்கின்றோம் தவிர இது எங்களுடைய வீடு என யாரும் மார்தட்ட முடியாது.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து கடந்த 13 வருட காலத்தில் பலர் வெளியேறி பல கட்சிகள் உருவாக்கியுள்ளன. ஒரு தனி நபரின் பிழையான செயல்பாட்டினால் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

உயர் நீதி அரசராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் உட்பட பலர் சென்று இருக்கின்றார்கள். ஒவ்வொரு தடவையும் ஒரு தனி மனிதனின் செயற்பாட்டால், பலர் கட்சியை விட்டு வெளியேறும் நிலைமை காணப்படுகின்றது.

இதற்கமைய தமிழ் தேசியம் தேய்ந்து கொண்டு செல்கின்றது இந்த தமிழ் தேசியம் தொடர்ந்து தேய்ந்து கொண்டு செல்லும் போது கட்சியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக "சுத்துமாத்து" சுமந்திரனுக்கு தமிழரசுக் கட்சிக்குள்ளும் "செல்வாக்கு" குறைந்து வருவதாக அவதானிக்கப்படுவதாக செய்தியாளர் அறிவித்துள்ளார். எனினும் சிறீதரன் சிவஞானம் எம்பஏஏ அவர்களின் கருத்தை முற்றாக நாம் நம்ப முடியாது என்றும் அவர் சுமந்திரன் பக்கம் இருந்து ஏதாவது சலுகைகள் மற்றும் ரணில் பக்கம் இருந்து கிடைக்கு "இலட்சக் கணக்கான" சன்மானங்கள் எதுவும் கிடைத்தால் அதற்கும் மயங்கக் கூடியுவர்" என்றும் செய்தியாளர் எழுதியுள்ளார்.



# யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு நினைவு நூல் வெளியீடு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வலம்புரி நட்சத்திர விடுதியில் ஒரு நிகழ்வு இடம் பெற்றது. அது ஒரு நினைவு கூர்தலாகவும் இருந்தது. அதேசமயம் அதில் ஓர் அரசியலும் இருந்தது. ஓராண்டுக்கு முன் கொழும்பில் உயர்நீர்த்த திருமதி. கௌரி தவறாசாவை நினைவு கூர்ந்து அவருடைய நினைவு நூலை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு அது. திருமதி. கௌரி தவறாசா நாடறிந்த ஒரு வழக்கறிஞர். அவரும் அவருடைய கணவனும் ஒன்றாகச் சேர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அகப்பட்டவர்கள் பலரை விடுவித்திருக்கிறார்கள். தமிழ் சட்டத்துறைப் பரப்பில் குறிப்பாக தலைநகரில் துருத்திக் கொண்டு மேலெழுந்த ஒரு பெண் ஆளுமையாக அவரைக் கூறலாம். அதுபோலவே தமிழ்ப் பரப்பில் பெருந்தொற்று நோய் காவு கொண்ட ஒரு முக்கிய பெண் ஆளுமையாக அவரைக் கூறலாம். தமிழ் சட்டத்துறையில் இப்பொழுது பெண்கள் அதிகமாக வருகிறார்கள். எனினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை பிரதிநிதித்துவப் படுத்தியவர்களில் திருமதி. கௌரி சங்கரி முக்கியமானவர்.

இலங்கைத் தீவு பிரித்தானியரிடமிருந்து விடுபட்ட பின்னரான கடந்த சுமார் ஏழு தசாப்த காலத்தில் ஒப்பிட்டளவில் அதிக காலம் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற அசாதாரண சட்டங்களின் கீழ்தான் ஆளப்பட்டு வருக்கிறது. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையம் தொகுத்த ஒரு நூல் உண்டு. இந்த ஆங்கில நூல் சட்டத்துறை வல்லுநர்களின் கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். இந்நூலின் முன்னுரையில் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட எழுதிய முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்.. 1947 ஆம் ஆண்டிலிருந்து சிறிய இடைவெளிகளைத் தவிர்த்துப் பார்த்தால் இலங்கை தீவில் அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்ச்சியாக அமுல் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இந்த அடிப்படையில் பார்த்தால் அசாதாரண சட்டமே சாதாரண சட்டமாக பயிலப்படும் ஒரு நிலைமையை காணலாம். இதனால் சாதாரண சட்டங்களும் அசாதாரண சட்டங்கள் போல செயலாற்றும் ஒரு நிலைமையையும் காணலாம்.

அதுதான் உண்மை. தமிழ் மக்கள் மத்தியில் சாதாரண உரையாடல்களில் ஒரு பொருளின் அல்லது ஒரு சம்பவத்தின் சிறப்பை கூறுவதற்கு ஒரு வார்த்தை பயன்படுத்தப்படுவதுண்டு. "சட்டப்படி". இங்கு சட்டப்படி என்ற வார்த்தை சட்ட ரீதியிலான பரிமாணத்தில் பயன்படுத்தப்படவில்லை. மாறாக குறிப்பிட்ட பொருள் அல்லது குறிப்பிட்ட சம்பவத்தின் தரச் சிறப்பை கூறுவதற்கு அது பயன்படுத்தப்படுகிறது. அம்சமானது அல்லது சிறந்தது என்ற பொருளில்தான் அந்த வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் கடந்த சுமார் 7 தசாப்தகால தமிழ் அரசியல் அனுபவத்தை தொகுத்துப் பார்த்தால். சட்டப்படி என்பது ஒரு நல்ல வார்த்தை அல்ல. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், தனிமைப்படுத்தல் சட்டம் முதலாக பெரும்பாலான சட்டங்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை ஒடுக்கும் கருவிகளாகத்தான் நடைமுறையில் உள்ளன.

மேற்கத்திய ஜனநாயகப் பரப்புகளில் ஓர் அரசைக் கட்டமைக்கும் மூன்று முக்கிய தூண்களான சட்டவாக்கத்துறை, (அல்லது அரசாங்கம்). நீதிபதிபாலனத்துறை, படைத்தரப்பு ஆகிய மூன்றுக்கும் இடையே வலு வேறாக்கம் உண்டு. அதாவது ஒவ்வொரு பிரிவும் அதற்குரிய சுயாதீனத்தோடு இயங்க முடியும் என்று பொருள். ஆனால் இலங்கைத் தீவில் தமிழ் அனுபவம் அதுவல்ல. ஜனநாயக செழிப்புமிக்க அரசியல் பரப்புகளில் வலு வேறாக்கம் பிரயோகத்தில் உண்டு. ஆனால் இலங்கை தீவில் இருப்பது இன நாயகம்தான். எனவே ஜனநாயக இதயம் செழிப்பாக இராத நாடுகளில் சட்டவாக்கத்துறை, நீதிபதிபாலனத்துறை, பாதுகாப்புத்துறை ஆகிய மூன்றுக்கும் இடையே வலுவேறாக்கம் இருக்காது. மாறாக அங்கு அரசின் கொள்கை எதுவோ அதை அமுல்படுத்தும் உபகரணங்களாகவே நீதிபதிபாலனத் துறையும் படைத்துறையும் இயங்கும். இதை சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பானது அதன் ஒடுக்கும் தேவைகளுக்காக சட்டங்களை உருவாக்கும். அதை நீதிபதிபாலனத் துறையும் படைத்துறையும் அமல்படுத்தும். இங்கு சட்டம் எனப்படுவது ஒடுக்குமுறையின் ஒரு கருவியாகத்தான் பிரயோகத்தில் உண்டு. அரசின் கொள்கை ஒடுக்குமுறையாக இருந்தால் சட்டம் அதன் கருவியாக செயல்படும் என்பதே பிரயோக தர்க்கம் ஆகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒடுக்குமுறையை வெளிப்படையாக முன்னெடுப்பது பெருமளவுக்கு அரச படைகள்தான். படைத்தரப்பு அரசின் உபகரணங்களில் ஒன்றுதான். அது போலவே திணைக்களங்களும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள்தான். 2009க்கு பின் அரச திணைக்களங்கள் ஏதோ ஒரு விதத்தில் சிங்கள பௌத்த அரசுக் கொள்கையை முன்னெடுத்து வருகின்றன. உதாரணமாக வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், நில அளவை திணைக்களம், கனிமவியல் திணைக்களம், கடத்தொழில் திணைக்களம் போன்றவற்றை இங்கு சுட்டிக் காட்டலாம். அதாவது அரசு திணைக்களங்கள் எனப்படுகின்றவை அரசின் உபகரணங்கள்தான். அவை அரசுக் கொள்கையை அமல்படுத்தும் உபகரணங்களே. அரசின் கொள்கை ஒடுக்குமுறையாக இருக்குமிடத்து அரசு திணைக்களங்களும் ஒடுக்கு முறையின் கருவிகளாகவே செயல்படும்.

இப்படிப்பட்டதோர் வரலாற்று பின்னணியில் பயங்கரவாத தடைச் சட்டம் மட்டும்தான் தமிழ் மக்களை ஒடுக்கியது என்பதல்ல, அண்மை ஆண்டுகளில் பெரும் தொற்று நோய்க் காலத்தில் தனிமைப்படுத்தற் சட்டத்தையும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தியதை இங்கு நினைவூட்டலாம். நினைவு கூர்தலுக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகளை அவர்கள் கைது செய்ய முற்பட்டபொழுது தனிமைப்படுதல் சட்டத்தை ஒடுக்கும் சட்டமாக அவர்கள் பயன்படுத்தினார்கள். அதுபோலவே சில வாரங்களுக்கு முன் உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியகச் சட்டமும் ஒடுக்கும் நோக்கத்தைக் கொண்டதுதான். அதாவது தொகுத்துக் கூறின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு தமிழ் மக்களையும் தனக்கு எதிராகப் போராடுகின்றவர்களையும் ஒடுக்குவதற்கு ஒரு சட்டம் தேவைப்படுகிறது. அது பயங்கரவாத தடைச் சட்டமாகவோ, திருத்தி அமைக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமாகவோ, அவசரகாலச் சட்டமாகவோ, அல்லது தனிமைப்படுத்தல் சட்டமாகவோ, அல்லது புனர்வாழ்வு பணியகச் சட்டமூலமாகவோ இருக்கலாம்.

இவ்வாறான ஒரு சட்டப் பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்து பார்க்கும் பொழுதே தமிழ் சட்டப்பேரப்பில் தவராசா+கௌரி தம்பதிக்கு உள்ள முக்கியத்துவத்தை கணிப்பிடலாம். அவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடை சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி வென்றெடுத்த 40 வழக்குகளைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய நினைவு நூல் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த வழக்குகளின் விபரங்களை படிக்கும் எவரும் பயங்கரவாத தடைச் சட்டம் தமிழ் மக்களை எவ்வாறு ஒடுக்கியது, இப்பொழுதும் ஒடுக்குகிறது என்பதனை கண்டுபிடிக்கலாம். அதுமட்டுமல்ல கௌரி சங்கரி மனித உரிமைகள் என்ற விடயத்தில் மூன்று இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பதனையும் அந்த நூல் நமக்கு காட்டுகிறது.

இது அந்த நூலுக்குரிய முக்கியத்துவம். இதைவிட அந்த நினைவு நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு வேறு ஒரு முக்கியத்துவம் உண்டு. என்னவெனில், நிகழ்வில் தமிழ்த் தேசியப் பரப்புக்குள் நிற்கும் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோரைத் தவிர அவர்களுடைய கட்சிகளை சேர்ந்த ஏனைய பெரும்பாலான உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று வடக்கு - கிழக்கில் பெரும்பாலான மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளை அங்கே காணமுடிந்தது. அண்மை ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் ஒரு நிகழ்வில் ஒன்றாகக் காணப்பட்டமை என்பது அசாதாரணமானது. அந்த அடிப்படையில் அந்த நிகழ்வுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. நிகழ்வின் முடிவில் கௌரி சங்கரியின் கணவர் தவராசா ஆற்றிய உரை உணர்வுபூர்வமாக இருந்தது. அதேசமயம் அதில் ஓர் அரசியல் செய்தியும் இருந்தது. அதாவது அது ஒரு நினைவு கூர்தல் நிகழ்வு மட்டுமல்ல, அதன் மூலம் ஏதோ ஒரு தரப்புக்கு ஏதோ ஒரு அரசியல் செய்தியை உணர்த்தும் உள்நோக்கமும் அதில் இருந்ததா?

அதே சமயம் அந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் பின் கௌரிசங்கரியின் கணவரும் தமிழரசுக் கட்சியின் கொழுப்புக் கிளை முக்கியஸ்தருமான தவறாசா ஓர் ஊடகச் சந்திப்பை நடத்தியிருந்தார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரனுக்கு எதிரானவைகளாகக் காணப்பட்டன. ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் சுமந்திரனுக்கு எதிராக கருத்துத் தெரிவித்திருக்கும் ஒரு பின்னணியில் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவரான தவராசா தெரிவித்த கருத்துக்களையும் தொகுத்து பார்க்கும் பொழுது கூட்டமைப்புக்குள் உட்கட்சி பூசல்கள் புதிய வடிவத்தை அடைகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. ஒருபுறம் பெருந்தொற்று நோயினால் காவு கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பெண் ஆளுமையை நினைவு கூரும் நிகழ்வில் எல்லா கட்சிகாரர்களும் ஒன்றாக காணப்பட்டார்கள். இன்னொருபுறம் அந்நிகழ்வின் பின் நடந்த ஊடகச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இருப்பவற்றில் பெரிய கட்சியான கூட்டமைப்பு ஓர் இறுக்கமான கட்டமைப்பாக இல்லை என்பதை தமிழ் மக்களுக்கு உணர்த்தின. ஒரே நாளில் தமிழ் மக்களுக்கு கிடைத்த இரண்டு முரணான செய்திகள் அவை.

## எங்கள் குலதெய்வம்
## (இன்னிசை வெண்பா)

-----------------------------

**வேழ முகனை வருந்தித் துதித்திட**
**பேழை வயிற்றோன் பெருநிதி தந்தே**
**கணங்கள் நெருங்கிடாக் காத்திடும் காவல்**
**கணபதி என்கவிக்குக் காப்பு.**

**வருத்தலைவி ளான்பதி வான்புகழ் பூமி**
**மருத மரத்தின் மடியிலே தான்தோன்றி**
**முத்திரை காட்டும் விநாயகத் தேவனை**
**நித்தமும் சேவித்தல் நன்று.**

**முருகனின் அண்ணனே மோதகப் பித்தா**
**கரும்புடன் தேனையும் காரெள் கலந்துமே**
**காலம் தவறிடாக் காணிக்கை தந்தனை**
**கோலம் குறைவறக் காத்து.**

**குளக்கரை மாமருதில் கோலமாய் நின்று**
**விளக்குகள் ஏற்றி வணங்குவோர் விக்கினம்**
**போக்கும் துதிக்கைப் பகவனை வேண்டினால்**
**நீக்குவான் மாறிடா நோய்.**

**பார்வதி மைந்தனே பானை வயிற்றனே**
**சோர்வுடன் வந்தவர் சோகம் அறிந்தே**
**பரிவுடன் பாசமாய்ப் பாதுகாத் திட்ட**
**கரிமுகக் காட்சியைக் காட்டு.**

-----------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# தேசிய சிக்கலைத் தீர்ப்பதில் துணை நிற்கும் பரந்த மனப்பான்மை

- ஜெஹான் பெரேரா
(இலங்கையின் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி அமைப்பைச் சேர்ந்த நீண்டகாலக் கைதிகள் 8 பேரின் விடுதலையானது யாரும் எதிர்பாராதது. சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் போராட்ட இயக்கத்துடன் தொடர்புடைய சுமார் 4,000 பேரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளது. ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இருந்தும் பல நூற்றுக்கணக்கானவர்கள், ஏன் அதைவிட அதிகமாமானவர்கள் தொடர்ந்தும் பல மாதங்களாக தடுப்புக்காவலில் வாடுகின்றனர். அவர்களைத் தேசிய மற்றும் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புகளால் விடுவிக்க அல்லது பொதுமன்னிப்புக்கான அழைப்புகளை அரசாங்கம் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் தலைவர் வசந்த முதுலிகே மற்றும் மாணவர் இயக்கத்தின் தலைமையில் செயற்படும் இளம் வண.கலவேவா ஸ்ரீதர்ம தேரர் இருவரது கைதுகள் பரவலான கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. அண்மையில் நாட்டின் மனித உரிமைகள் ஆணையம் இந்தக் கைதுகளைக் கண்டித்துள்ளளது. இது ஒரு அரச அமைப்பாக இருந்தாலும் போற்றுதற்குரிய சுதந்திர உணர்வை வெளிப்படுத்தி வருகிறது.



எட்டு விடுதலைப் புலி உறுப்பினர்களை அரசாங்கம் விடுவித்தமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அவர்களை விடுவிக்க வேண்டும் என்பது தமிழ் சமூகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். இது தேசிய நல்லிணக்கத்திற்கான சூழலை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கும். அவர்களது குடும்பத்தினர் மற்றும் தேசிய மற்றும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளின் எதிர்ப்புகள் மற்றும் வேண்டுகோள்கள் இருந்தபோதிலும், குறைந்தபட்சம் நான்கு முந்தைய அரசாங்கங்கள் இவர்களை விடுதலை செய்வதிலிருந்து பின்வாங்கியிருந்தன. விடுவிக்கப்பட்டவர்களில் மூவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை படுகொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். குண்டுத் தாக்குதலில் சந்திரிகா குமாரதுங்க ஒரு கண் பார்வையை இழந்தவர். ஜனாதிபதி இரணில் விக்ரமசிங்கவின் கையொப்பமிடப்பட்ட ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் மூலம் அவர்களை விடுவிப்பதற்கு முன்னர், அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களது உணர்வுகளை கேட்டறிந்து அவரது ஒப்புதலைப் பெற்றிருந்தது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னைப் படுகொலை செய்ய முயற்சித்த விடுதலைப் புலி உறுப்பினருக்கு மன்னிப்பு வழங்கியது போன்று, முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க, சித்திரவதைக்குள்ளாகி பிளவுபட்ட எமது நாடும் மக்களும் நலம்பெறத் தேவையான பெருந்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

எட்டுக் கைதிகளில் நால்வர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையை விட நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் என்று ஜனாதிபதி செயலகம் ஒரு திடுக்கிடும் ஒப்புதலைத் தெரிவித்துள்ளது. "மூன்று கைதிகளுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதில் அவர்கள் 22 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவித்து விட்டார்கள். ஒரு கைதிக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவித்து விட்டார். இரண்டு கைதிகளுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவித்து விட்டார்கள். இவர்கள் ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெற்றவர்களில் அடங்குவர். இது ஒரு கடுமையான மனித உரிமை மீறலாகவும், அவர்களை இவ்வாறு சிறையில் அடைத்து வைத்திருந்தவர்கள் சகிக்க முடியாத அதிகார வரம்புமீறலை இளைத்துள்ளார்கள். இது எப்படி நடந்தது என்பதை அரசாங்கம் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கும், தேசிய மற்றும் பன்னாட்டு சமூகங்களுக்கும் விளக்கம் அளிக்க வேண்டும். இந்த நீதிக்கு மாறான கூடுதல் நீதித்துறை தடுப்பு, ஜெனீவா போன்ற பன்னாட்டு மன்றங்களில் கூறப்படும் கூற்றுகளை நியாயப்படுத்த முனைகிறது. மேலும் எந்த நீதித்துறை ஆணையின்றி இன்னும் எத்தனை பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

## இடிதாங்கி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துவதற்கும் வரம்புமீறல் செய்வதற்கும் முன்னால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் சக்தியின்மை மற்றும் அவர்கள் குறைக்கப்படக் கூடிய பரிதாபமான அவலநிலை-யை புலிகளின் கைதிகள் விடயத்தில் காணலாம். மனித உரிமைகள் ஆணையம், "1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம் **(PTA)** எண் .48 இன் பிரிவு 9 **(1)** இன் கீழ் திருத்தப்பட்டது. அமைச்சர் எந்த ஒரு நபருடன் தொடர்புடையவர் அல்லது அக்கறை கொண்டுள்ளார் என்று நம்பவோ அல்லது ஐயப்படவோ காரணம் உள்ளது. எந்தவொரு சட்டத்திற்குப் புறம்பான செயலும், அமைச்சரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய இடத்தில் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய நபரை முதல் நிகழ்வில் மூன்று மாதங்களுக்கு மிகாமல் தடுத்து வைக்குமாறு அமைச்சர் கட்டளையிடலாம். தடுப்புக்காவலின் மொத்தக் காலம் பன்னிரெண்டு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், ஒரு முறை மூன்று மாதங்களுக்கு மிகாமல் ஒரு காலத்திற்கு அத்தகைய உத்தரவு அவ்வப்போது நீட்டிக்கப்படலாம். 43 ஆண்டுகளாக பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் இந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வரம்புமீறப்பட்டு வருகிறது. மேலும் நீதித்துறை உத்தரவு இல்லாமல் மக்களை சிறையில் அடைக்க அனுமதிக்கும் வகையில் இது ஒரு கொடூரமான சட்டம் என்று சரியாகவே அழைக்கப்படுகிறது.

இந்த ஆண்டு யூலை மாதம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி இரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். உடனேயே அரசாங்கம் பாதுகாப்பு படையினர் ஊடாக எதிர்ப்பு இயக்கத்தை கடுமையாக ஒடுக்கியது. **(15ம் பக்கத் தொடர்ச்சி)**

FOOD SERVICE WORKER



YOU CAN WORK AT:
- Long-Term Care Homes
- Retirement Homes
- Hospitals
- Schools
- Restaurants

Classes Starting
November 29, 2022

- 4 MONTHS ONLY
- LOW TUTION FEE
- PLACEMENT ON DEMAND
- ONLINE CLASSES
- BOOKS INCLUDED
- FREE CONSULTATION

CONTACT US NOW
(416) 292 2455
4168 Finch Ave East, Unit 330 Scarborough

JRS College
of Business and Health Care Inc.

# தனது பிரதமர் அலுவலகத்தில் நுழைவதற்கு முன் இந்து பாரம்பரிய முறைப்படி வாசலில் விளக்கேற்றிய ரிஷி சுனக்

உலக செய்திகள் World News



இங்கிலாந்தின் புதிய பிரதமர் ரிஷி சுனக் தனது பிரதமர் அலுவலகத்தில் நுழைவதற்கு முன் இந்து பாரம்பரிய முறைப்படி வாசலில் விளக்கேற்றியதாக காட்சி வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

பிரபல ஊடகங்கள் உட்பட பலராலும் பகிரப்படும் இந்த வீடியோ குறித்த உண்மையான தகவல் தற்போது பகிரப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் லிஸ் ட்ரஸ் ராஜினாமா செய்ததையடுத்து, பேராதரவுடன் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும் பிரித்தானியாவின் புதிய பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரிஷி சுனக் அக்டோபர் 25 அன்று பொறுப்பேற்றார். அன்று உலக மக்கள் இந்த பதவியேற்பை கொண்டாடி மகிழ்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் அவர் முன்னாள் பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கட்கு புகழாரம் சூட்டிய விவகாரம் பிரதமர் மோடியையும் அவரது ஆதரவாளர்களையும் குறிப்பாக பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகக் கும்பலையும் கோபத்தின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது.

எனினும் தனது பதவியின் மூலம் பிரித்தானியாவில் பிரதமராக பதவியேற்கும் முதல் இந்திய வம்சாவளியினர் என்ற பெருமையை ரிஷி பெற்றுள்ளார். மேலும், ஒரு வெள்ளையர் அல்லாத முதல் பிரித்தானிய பிரதமர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

பிரதமராக பொறுப்பேற்ற ரிஷி சுனக், இலக்கம் 10, டவுனிங் தெரு என்னும் விலாசத்தில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்திற்குள் நுழைவதற்கு முன், வாசலில் இந்து பாரம்பரிய முறைப்படி பொட்டு வைத்து, விளக்கேற்றி வழிபட்டதாக காணப்படும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவத் தொடங்கியுள்ளது.

42 வயதான பிரதமர் ரிஷி சுனக் பெருமையுடன் பூஜைகளை செய்து தனது இந்து பாரம்பரியத்தை வெளிப்படுத்துகிறார் என்று பலர் கூறி வருகின்றனர். இதனால் அவருக்கு உலக இந்து மக்கள் மத்தியில் நன் மதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்த வீடியோ குறிப்பாக ஆப்பிரிக்காவில் வைரலாகியுள்ளது, பல செய்தி நிறுவனங்கள் மற்றும் ஊடக பிரபலங்கள் இதைப் பகிர்ந்துள்ளனர். ட்விட்டரில் 800,000 பின்தொடர்பவர்களைக் கொண்ட நைஜீரியாவின் மிகப்பெரிய பத்திரிகைகளில் ஒன்றான PM News என்ற ஊடகம் கூட இந்த வீடியோவை பகிர்ந்துள்ளது.

# மன்னார் எருக்கலம் பிட்டி மகளிர் மகா வித்தியாலயத்தின் 120 ஆவது ஆண்டு ஆரம்ப நிகழ்வுகள்

இலங்கை செய்திகள் Sri Lanka News



மன்னார் எருக்கலம் பிட்டி மகளிர் மகா வித்தியாலயத்தின் 120 ஆவது ஆண்டு ஆரம்ப விழா மற்றும் இமாகாண, தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் வியாழக்கிழமை (3) அன்று பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் ஓய்வு பெற்ற மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன் விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன் போது மாகாண, தேசிய, மட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் கௌரவிக்கப்பட்டனர்.

**- மன்னார் நிருபர் (3-11-2022)**




MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# தேசிய சிக்கலைத் தீர்ப்பதில் துணை நிற்கும் பரந்த மனப்பான்மை

(13ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாதங்களுக்கும் மேலாக நிலவி வந்த போராட்டத் தளங்கள், உலகெங்கிலும் உள்ள ஊடகங்களில் மக்களின் அகிம்சையின் ஆற்றலுக்குச் சான்றாகக் காட்டப்பட்டிருந்தன. பதாதைகள் கிழித்தெறியப் பட்டன. தெருக்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இது அவர்கள் தப்பி ஓடும் வரை நீடித்தது. இது போன்ற கடுமையான சம்பவங்கள், தடைச் செயல்கள், சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கான உரிமைகளை மீறல்கள் வெகு விரைவில் வெகுமக்கள் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்தது. இன்னும் மோசமானது, வன்முறையில் ஈடுபட்டதாகவோ அல்லது அதற்கு சதி செய்ததாகவோ காட்டப்படாதவர்களை சிறையில் அடைக்க அரசாங்கம் கொடுரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியது.

இன்று நாட்டில் மேலோட்டமாகப் பார்க்கும் போது இயல்பு நிலை உள்ளது. எதிர்ப்புகளை வலுக்கட்டாயமாக அடக்குவதன் காரணமாக, சுற்றுலாப் பயணிகளும் அவர்களின் டொலர்களும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி-யாக இருக்கும். ஆனால் உண்மையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் பொருளாதாரப் பற்றாக்குறை மற்றும் வெகுமக்கள் அனுபவிக்கும் அநீதி உணர்வின் எரிமலைக்கு - அது எந்த நேரத்திலும் வெடிக்கலாம் - தலைமை தாங்குகின்றனர். போராட்ட இயக்கத்தில் உள்ளவர்கள், தங்கள் சக போராட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பதை நன்கு அறிவார்கள். அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தூண்டிவிட்டு, அதில் பங்குகொண்ட அரசாங்கத்துடன் இணைந்த கைக்கூலிகள் தங்கள் சுதந்திரத்தை தொடர்ந்து அனுபவித்து, அவர்களின் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இப்படியான இரட்மை நிலைப்பாடுகளைப் பார்க்கும்போது அரசாங்கத்தின் மற்றும் அதன் தலைமையின் நம்பகத்தன்மையை தொடர்ந்து சிதைத்து வருவதோடு, எதிர்கால எதிர்ப்புகளை அணிதிரட்ட மின்னல் கடத்தி போல் செயல்பட முடியும்.

செயலற்ற எழுச்சி

போராட்ட இயக்கம் என்பது பொது வெளியில் வந்து முழக்கம் எழுப்பி போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் பலத்தை காட்டுபவர்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டு, தங்கள் குடும்பங்களுக்கு சம்பாதிப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய மிகப் பெரிய போராட்ட இயக்கம் தற்போது செயலிழந்துள்ளது. எழுபது முதல் 100 விழுக்காட்டைத் தாண்டிய பணவீக்கத்தால் மக்களின் உண்மையான வருமா-னம் குறைந்தது பாதியாகச் சுருங்கிவிட்ட நிலையில் ஒரு சில அத்தியாவசியப் பொருட்களின் விலையை அரசு குறைத்தால் மட்டும் போதாது. பொருளாதாரச் சரிவுக்குக் காரணமானவர்கள் சுதந்திரமாகவும் அதிகாரத்திலும் உள்ளனர். ஆனால் புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் பதவியேற்க வேண்டும் என்று எதிர்ப்புத் தெரிவித்து போராடியவர்கள்தான் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

வசந்த முதலிகே மற்றும் வண. கல்வேவ ஸ்ரீதம்மா ஆகியோர் அரசாங்கத்தால் அதிகாரமற்றவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அடையாளங்களாக மாறிவிட்டனர். அவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் **(PTA)** கீழ் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது பயங்கரவாதத்தைப் பற்றியது மற்றும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகவே உள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு பயங்கரவாதத்தை வரையறுத்துள்ளது, "எந்தவொரு நபரும் அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பயன்படுத்துதல் மற்றும் வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பாக பொதுமக்கள் அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினிடம் அரசியல், கருத்தியல் அல்லது மதக் காரணமாக அச்சத்தை பரப்பும் நோக்கம் கொண்டது.

இந்த நியமத்தைப் பிரயோகித்து, ஒகஸ்ட் 18 ஆம் திகதி முதல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், வசந்த முதலிகே மற்றும் வண. ஸ்ரீகல்வேவ ஸ்ரீதம்மா ஆகியோரைக் கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் தொடர்ந்து சிறையில் அடைத்திருப்பது "நியாயமற்றதும் மற்றும் நியாயயப்படுத்த முடியாததுமாகும்" என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. அவர்கள் இருவரும் உடல்நிலை சரியில்லாமல் உள்ளனர். அவர்கள் மருத்துவமனையில் மோசமான நிலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், குறிப்பாக வண. ஸ்ரீதம்மா டெங்கு வைரஸ் தொற்றுக்கு ஆளாகக் கூடும் எனவும் அது அவருக்கு எமனாக முடியும் என்றும் நம்பப்படுகிறது. அவர்கள் மீது இன்னும் குற்றம் சாட்டப்படவில்லை. அவர்கள் பன்னாட்டு சமூகத்திற்கு அரசாங்கம் முழுவதுமாக இரத்து செய்வதாக உறுதியளித்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கடுமையான விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இன நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்டு ஜனாதிபதி இரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது போல இவர்களுக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும். அது நாட்டை பீடித்துள்ள நோயைத் தீர்ப்பதற்க உதவும்.

(ஆங்கிலத்தில் "த ஐலன்ட் நாளேட்டில்" வெளிவந்த **Spirit of magnanimity to accompany national problem solving** என்ற ஆங்கிலக் கட்டுரையின் மொழியாக்கம் இது. **https://island.lk/spirit-of-magnanimity-to-accompany-national-problem-solving/** என்ற இணையதள முகவரியில் மூலத்தை படிக்கலாம்.
*தமிழாக்கம் கனடா நக்கீரன்*)











GEORGE BROWN COLLEGE
OPEN
HOUSE
SATURDAY, NOVEMBER 5, 2022, 10AM–2PM
GEORGEBROWN.CA/OPENHOUSE
SCHOOL LIFE BALANCE
FROM CLASSROOM TO CAREER
LOCAL = GLOBAL
GEORGE BROWN COLLEGE


உயர் பாடசாலை
அனுமதிக்கான
OPEN
HOUSES
தகவல் அறியும் இரவு
Toronto District School Board
நவம்பர் முதல் ஜனவரி வரையிலான திகதிகள். மேலதிக விபரங்களுக்கு www.tdsb.on.ca/openhouses ஐப் பார்வையிடவும்.
tdsb.on.ca/OpenHouses

## வேலணை ஆத்திசூடி வீதியை பிறப்பிடமாகவும், கனடாவில் வாழ்ந்து, அமரத்துவமான திருமதி..துரைராஜா பராசக்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு கூறும் தினம்










வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

# சமர்ப்பணம்

முன்னைய தவத்தின் பேறாய்
முகிழ்ந்ததோர் அன்புமிகுந்த அன்னையே
பின்னையெம் வாழ்வுப் பூங்கா
சிறப்பு வைத்த அன்பே
தந்தையை இழந்து நாம் தவித்திட
உன்னையே தந்து உயிராய்
உவப்பொடு எம் பணி செய்தாயே
என்னேயுன் பெருமை என்று
எல்லோரும் வியந்து போன்ற
மண்ணிலே மதிப்பு பொங்க
மக்களை உயர்த்தி வாழ்ந்தாய்
எண்ணிய எண்ணமெல்லாம்
இதழ்கமழ் மலராய் தொடுத்து
கண்ணிலே ஒற்றிப் போற்றிக்
உன் கழலடி வைத்தோம் அம்மா
அம்மா உன் புண்ணியச் செயல்கள்
விண்ணிலே சேர்ப்பதாக
"தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

குடும்பத்தினர்


ஓம் சாந்தி ஓம் சாந்தி
ஓம் சாந்தி


தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்'இல்
மாவீரர் துயிலும் இல்லம்
நவம்பர் 27-2022 ஞாயிற்றுக்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
றொறன்ரோ
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
27-11-2022 ஞாயிற்றுக்கிழமை
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
Tel: 514-660-5891
ஒட்டாவா
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex
Hall - A
1701 Woodroffe Avenue
Ottawa, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.com/tamilremembrance

# தமிழ் சினிமாவின் இளம் இசையமைப்பாளர் ரகுராம் மரணம்



தமிழ் சினிமாவின் இளம் இசையமைப்பாளர் ரகுராம் உடல்நலக் குறைவால் மரணம் அடைந்தார். சென்னை, வட பழனியை சேர்ந்தவர் இசையமைப்பாளர் ரகுராம். 2017ல் சுரேஷ் சங்கைய்யா இயக்கத்தில் விதார்த் நடித்த, "ஒரு கிடாயின் கருணை மனு" படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானார். தொடர்ந்து ஓரிரு படங்களுக்கு இசையமைத்தார். ஆல்பம் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். சத்திய சோதனை என்ற படத்திற்கு இசையமைத்து வந்தார். சமீபத்தில் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்ட இவர் அதற்கான சிகிச்சை பெற்று வந்தார். தொடர்ந்து உடல்நல பிரச்னையால் சென்னை, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர் இன்று (அக்., 29) காலை உயிரிழந்தார். இவரின் மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



# திரையில் மட்டும் தான் வில்லன்.. ரியலில் குடிப்பழக்கமே இல்லாத, அசத்தலான 5 நடிகர்கள்

சினிமாவை பொறுத்தவரை மக்களிடையே மாயபிம்பம் ஒன்று இருக்கிறது. சினிமாக்காரர்கள் என்றாலே தப்பானவர்கள் எதையும் செய்யக்கூடியவர்கள் என நினைப்பவர்களும் உண்டு.

ஆனால் அதையெல்லாம் பொய்யாக்கும் படி பல பேர் வாழ்ந்து இருக்கின்றனர். திரையில் வில்லனாக நடிப்பவர்கள் கூட நிஜ வாழ்க்கையில் ஹீரோக்களாக இருக்கின்றனர். நிஜ வாழ்க்கையில் மதுப்பழக்கம் இல்லாத 5 நாயகர்கள்:

நம்பியார்: நம்பியார் இப்போதைய வில்லன்களுக்கெல்லாம் வில்லாதி வில்லன் என்று சொல்லலாம். ஆபுசு, சிவாஜி, ஜெமினி கணேசன், முத்துராமன், ஜெய் சங்கர் போன்ற அன்றைய ஹீரோக்களின் ஆஸ்தான வில்லன். திரையில் அத்தனை கொடுமைகள் செய்த நம்பியார், நிஜத்தில் குடிப்பழக்கம் இல்லாதவர். மேலும் இவர் தீவிர ஐயப்ப பக்தனும் கூட.

அசோகன்: அசோகன் அன்றைய காலகட்டத்தின் பட்டதாரி நடிகர். அசோகன் சண்டையிட்டு மிரட்டியதை விட தன்னுடைய வித்தியாசமான குரல் வளத்தால் நடுங்க வைத்தவர். நிறைய மதுகுடிக்கும் காட்சிகளில் நடித்த அசோகன், நிஜ வாழ்க்கையில் குடிப்பழக்கம் இல்லாதவர்.

ஜெய் சங்கர்: மாஸ் காட்சிகள், சண்டைக்காட்சிகள் இல்லாமல் ஒரு சாப்ட் ஹீரோவாக வலம் வந்தவர் ஜெய் சங்கர். இவர் நிறைய படங்கள் சம்பளமே இல்லாமல் நடித்து கொடுத்தவர். ஜெய் சங்கருக்கும் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் குடிபழக்கமே இல்லாமல் வாழ்ந்தவர்.

சிவகுமார்: தன்னுடைய சினிமா வாழ்க்கையில் இதுவரையில் எந்த கிசுகிசுக்களும் இல்லாமல் இருந்த கதாநாயகன் சிவகுமார். பல மேடை பேச்சுக்களில் நன்னெறிகளை பற்றி பேசி வரும் சிவகுமார், தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் குடிப்பழக்கம் இல்லாதவர். கல்யாண்குமார்: தமிழில் நெஞ்சில் ஊர் ஆலயம் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் கல்யாண்குமார். தமிழ், கன்னடம், தெலுங்கு 200க்கும் மேற்பட்ட படங்களில் இவர் நடித்து இருக்கிறார். 90 களின் காலகட்டத்தில் நிறைய குணச்சித்திர வேடங்களில் நடித்த இவர் மது குடிக்கும் பழக்கம் இல்லாதவர்.

# மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் சாந்தி திரையரங்கு விற்பனை வழக்கு.. பிரபுவின் சகோதரிகள் தொடர்ந்த மனுக்கள் தள்ளுபடி



சாந்தி திரையரங்கு சொத்துக்கள் விற்பனைக்கு தடை விதிக்க கோரி மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் மகள்கள் தாக்கல் செய்த கூடுதல் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. எங்கள் தந்தை நடிகர் சிவாஜி கணேசன் சுயமாக சம்பாதித்த ரூ.270 கோடி மதிப்புள்ள சொத்துகளை எங்கள் சகோதரர்கள் ராம்குமார் மற்றும் பிரபு ஆகியோர் முறையாக பராமரிக்கவில்லை. பல சொத்துகளை விற்பனை செய்து எங்களை ஏமாற்றி விட்டதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

ஆயிரம் பவுன் தங்க நகைகள், 500 கிலோ வெள்ளி பொருட்களையும் அவர்கள் அபகரித்துக் கொண்டனர். சாந்தி தியேட்டர் பங்குகளையும் அவர்கள் இருவரும் எடுத்துக் கொண்டனர். எனவே, எங்கள் தந்தை சம்பாத்தியம் செய்த சொத்துகளை அவர்கள் விற்பனை செய்தது செல்லாது என்று அறிவிக்க வேண்டும். சொத்தில் எங்களுக்கு பங்கு அளிக்கவும் உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தனர்.

இந்த வழக்கில், சாந்தி தியேட்டர் பங்குகள் மற்றும் அதன் சொத்துகளை விற்பனை செய்யும் நடவடிக்கையில் சகோதரர்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்டோர் ஈடுபட்டுள்ளதால், பிரதான வழக்கு விசாரணை முடியும் வரை இதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் எனக் கோரி, சாந்தி, மற்றும் ராஜ்வி சார்பில் கூடுதல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கில் இன்று இந்த கூடுதல் மனுக்களை நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி விசாரித்தார். அனைத்து சொத்துக்களிலும் தங்களுக்கு சமபங்கு உள்ளதாகவும், சாந்தி திரையரங்கு பங்கு மற்றும் சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் அக்ஷயா ஹோம்ஸ் ரியல் எஸ்டேட் நிறுவனம் மற்றும் சகோதரர்கள் ராம்குமார், பிரபு ஈடுபடுவதாகவும் பிரதான வழக்கை விசாரித்து முடிக்கும் வரை இது தொடர்பான சொத்துக்கள் விற்பனைக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என சாந்தி மற்றும் ராஜ்வி தரப்பில் வாதிடப்பட்டது.

நடிகர் ராம்குமார், பிரபு தரப்பில், சாந்தி தியேட்டர் விவகாரத்தில் அனைத்து நடைமுறைகளும் ஏற்கனவே முடிந்து விட்ட நிலையில் தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம் சார்பில், சாந்தி தியேட்டர் பங்குகள் முழுவதும் 2010 ம் ஆண்டிலேயே கைமாறி விட்டதாகவும், கட்டுமான பணிகள் முடித்த பிறகும், அவர்கள் குடும்ப பிரச்சினை காரணமாக குடியிருப்புகளை விற்க முடியாத நிலையில் இருப்பதாக வாதிடப்பட்டது. கூடுதல் மனுக்கள் மீது வாதங்கள் முடிந்து தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டிருந்த நிலையில், இரு மனுக்களையும் தள்ளுபடி செய்து நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி இன்று உத்தரவிட்டார்.

# மறுபடியும் பாலையானேன்

*முல்லையும் இல்லை குறிஞ்சியும் இல்லை - இங்கு*
*நல்ல வெய்யிலால் இயல்பது மாறி*

*தொல்லை தரு பாலையது உருவாக*
*அவ்வளவாய் வாய்ப்பும் இல்லை*

*ஆனாலும் பாலையானேன்!*

*ஐம்பதிலும் அறுபதிலும் என்னிலை வேறு - அன்று*
*குன்றும் குழியும் பற்றையும் பறுகும் - அதனால்*

*கொள்ளையும் கொலைகளும் நிகழ்ந்தது உண்மையே - அதை*
*தெள்ளத் தெளிவாக சொன்னவர் - பேராசான்*
*கணபதிப்பிள்ளையே - அவர்*

*"மணிக்கன் தோட்ட மருவி வாழும்*
*அம்மையன் கந்தன் ஆட்குத்தி நாகன்*
*என்போர்த் தலைஇய வன்றொழிற் கள்வர்*
*இருநெடும் பாதை மறைவி லிருந்து*
*வழியிற் போகும் மாந்தரை மறித்துக்*
*குத்தியு மடித்துங் கொல்லுங் கொடுந்தொழில்*
*செய்தூன் வளர்க்குஞ் செயிர் வினையாளர்"*

*என்று சொன்னதால் அன்றும் கள்வர் - இவ்வழி*
*நின்றே கொள்ளை அடித்ததால் - பொல்லாப்*
*பாலைக்குரிய பழியைச் சுமந்தேன்*

*எண்பது தொண்ணூற்றில் எத்தனை மாற்றம் - இம்*
*மண்ணது காணாத கவலையும் உள்ளதா போரினால் - ஆனாலும்*

*உண்ணவழி இல்லையேயென்று கொள்ளையர் எவரையேனும்*
*கண்டதில்லை என்வழியில் வல்லை வெளியில்*

*நல்லிருளிலும் நகைகளோடு நடமாடிய*
*தொல்லையில்லாக் காலமொன்று இருந்தது அன்று - இன்றோ*

*செப்பனிட்ட நேர்த்தியான பாதை - அழகாய்*
*கட்டப்பட்ட வரவேற்பு வளைவு - அன்றுபோல்*

*பாதையோரப் பிள்ளையாரும் தனிய இல்லை*
*நேராய்யொரு ஆஞ்சநேயர் அழகான கூரையின்கீழ்*

*அக்கம் பக்கம் பொட்டிக் கடைகள்கூட - அப்போ*
*எப்பக்கமும் எதுவும் இன்றித் தனித்திருந்து*

*தீங்கெதுவும் நீகழாது பாங்குடனே அருளிய ஆனைமுகன்*
*தாங்கிக் கொண்டார் தன்மீதும் குண்டுகளை*

*அன்று அதைப் போட்டவர்கள்*
*இன்று மிக அருகில் இருக்கின்றார்கள்*

*கண்ணை இமை காப்பதுபோல்*
*என்னேரமும் மக்களின் நலத்திற்காய் என்றவாறாம் - ஆனாலும்*

*நேரான அப்பாதை வழி நின்மதியாய்*
*போவாரார் இப்போது?*

*போதைக்கு அடிமையாகி பிறர் உடைமைகளை - இப்*
*பாதையிலும் நின்றுதான் பறிக்கிறார்கள்*

*ஆரிட்டைச் சொல்வதென்று தெரியாத*
*போராட்டம் மக்களிற்கு நீடிக்கும் நிலையிருக்க*

*எனக்கும் பெருங்கவலை 'பாலை' என்ற*
*விருப்பமில்லாப் பெயரொன்றைச் சுமப்பதுதான்.*

-- உமா மோகன் - Montreal- Canada --




# புத்தளம் மாவட்டபாடசாலை ஆசிரியர்களுக்கான *செயற்படுசார் வாய் மொழிமூல ஆங்கில பயிற்சி*

இலங்கை செய்திகள் Sri Lanka News

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (Ratnam Foundation-UK) அமைப்புக்களின் நிதியீட்டத்தில் மேற்படி பயிற்சி, இரண்டாவது தொகுதி ஆசிரியர்களுக்காக புத்தளம் புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஒக்ரோபர் 28,29 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் புத்தளம் பிரதேசம் சார்ந்த கற்பிட்டி, புத்தளம் வடக்கு மற்றும் தெற்கு கல்வி கோட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 21 பாடசாலைகளைச் சேர்ந்த 42 ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் இப் பாடசாலைகளில் கற்றுக்கொண்டிருக்கும் 4360 சிறார்களின் சிறப்பான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டுக்கு இது வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இரு நாட்கள் கொண்ட இப்பயிற்சி Regional English Language Supporting Centre இல் கடமையாற்றி ஓய்வுபெற்ற சிறந்த வளவாளர்களான திருமதி. கே.பெனடிக், திரு. சி.தயாகரன் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சியில் வகுப்பறை ஆங்கில பிரயோகம், சொல்களஞ்சியம் (vocabularies) மற்றும் சொற்தொடர்கள் (phrases) அடங்கிய 16 கருப்பொருட்களுடனான (themes) செயற்படுசார் பயிற்சி வழங்கப்பட்டது. இதனூடு ஆசிரியர்கள் கவர்ச்சிகரமான சுவரொட்டிகளை காட் சிப்படுத்தியதுடன் zig-zag ஆக்கங்களுடனான கதை சொல்லும் நுட்பங்களைப்பயன்படுத்தி தமது திறமைகளை வெளிபடுத்தியது சிறப்பாக அமைந்திருந்தது.

இப்பயிற்சியின்போது ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட துணை வழிகாட்டல் கைநூல்கள், 16 கருப்பொருட்கள் அடங்கிய லெமினேற் செய்யப்பட்ட கண்கவர் படங்கள் கொண்ட பொதிகள், தேசிய கல்வி நிறுவகத்தின் ABOE செயற்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்ட விரலிகள் மற்றும் பயிற்சியின்போது பயன்படுத்துவதற்கான காகிதம் மற்றும் எழுதுபொருட்களும் வழங்கப்பட்டிருந்தன.

இப்பயிற்சி அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் வதிவிட பணிப்பாளரும் முந்நாள் வலயக் கல்விப்பணிப்பாளருமாகிய திரு. சு.கிருஷ்ணகுமார் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அடுத்த கட்ட பயிற்சிகள் மட்டக்களப்பு மேற்கு மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலையில் பாடசாலை மாணவர்களுக்கான பால் வழங்கும் திட்டம் ஆரம்பிப்பு!



**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பாடசாலையில் இன்றையதினம் மாணவர்களுக்கான திரவ பால் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நலிவு சூழ்நிலையில் மாணவர்களிடையே போசாக்கு விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கின் அரச கால்நடை வைத்திய அதிகாரி செல்வி அனோஜா பத்மநாதன் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கான திரவ பால் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

நிகழ்வின் பின் எமது செய்தி சேவைக்கு கருத்து தெரிவித்த வைத்திய அதிகாரி செல்வி அனோஜா பத்மநாதன்,தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மந்த போசாக்கு நிலவி வருகின்றது.

குறிப்பாக கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் சிறார்கள், மாணவர்கள் மற்றும் வயதானவர்களிடையே இந்த மந்த போசனை குறைபாடு அவதானிக்கப்பட்டிருகின்றது.

இதை நிவர்த்தி செய்யும் முகமாக நிரல் அமைச்சின் திட்டத்தின் கீழ் திரவபால் வழங்கும் திட்டமானது முதற்கட்டமாக எமது மாந்தை கிழக்கு அரச கால் நடை வைத்திய அதிகாரியின் பிரிவுக்குற்பட்ட முல்லைத்தீவு நட்டாங்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இது தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு இடம்பெறும் என்றும் இந்த திட்டத்தின் ஊடாக மாணவர்களிடையே நிலவும் மந்த போசாக்கினை நிவர்த்திசெய்ய ஓரளவு முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் மாந்தை கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் மாந்தை கிழக்கு கால்நடை வளர்ப்போர் சங்கமும் கைகோர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பொட்டு வைக்காத பெண் பத்திரிகையாளருக்கு பேட்டி கொடுக்க மறுத்த வலதுசாரி தலைவர் மாநில மகளிர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது

இந்தியா செய்திகள் India News



மராட்டிய மாநிலத்தை சேர்ந்த வலது சாரி தலைவர் சம்பஜி பிடே நேற்றுமுன்தினம் அம்மாநிலத்தின் முதல் மந்திரி ஏக்நாத் ஷிண்டேயை சந்தித்துப் பேசினார். மந்திரலாயாவில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்புக்கு பிறகு வெளியே வந்த சம்பஜி பிடேயிடம் பெண் பத்திரிகையார் ஒருவர் கேள்வி எழுப்ப வந்தார்.

ஆனால், பெண் பத்திரிகையாளருக்கு பேட்டி கொடுக்க மறுத்த சம்பஜி பிடே, என்னிடம் பேட்டி கேட்டு வருவதற்கு முன்பாக நெற்றியில் பொட்டு வைத்து விட்டு வர வேண்டும். உங்களுக்கு என்னால் பேட்டி கொடுக்க முடியாது. ஒரு பெண் பாரத மாதாவுக்கு நிகரானவள். எனவே பொட்டு வைக்காமல் விதவை போல காட்சியளிக்ககூடாது என்று பிடே கூறினார்.

இது தொடர்பான வீடியோக்கள் வெளியாகி கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. சம்பஜி பிடேயின் இத்தகைய பேச்சு சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. இதனிடையே, இந்த விவகாரம் மாநில மகளிர் ஆணையம், சம்பஜி பிடே தனது சர்ச்சை கருத்து தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# கேரள போலீஸ் நிலையத்தில பச்சிளங்குழந்தையை மீட்டு தாய்ப்பால் கொடுத்த போலீஸ் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் பாராட்டு



கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் சேவாயூர் போலீஸ் நிலையத்தில் போலீஸ் அதிகாரியாக இருப்பவர் ரம்யா. கடந்த கடந்த அக்டோபர் 22ஆம் தேதி பூலக்கடவைச் சேர்ந்த ஆஷிகா என்ற பெண், குடும்பத் தகராறு காரணமாக தனது குழந்தையை கடத்திச் சென்றதாக தனது கணவர் ஆதில், மாமியார் மீது சேவாயூர் போலீஸில் புகார் அளித்தார். கடத்தப்பட்ட குழந்தையுடன் ஆதிலும் அவர் தாயார் சுல்தானாவும் பத்தேரியில் இருப்பது போலீசாருக்கு தெரியவந்தது.

உடனே பெண் போலீஸ் அதிகாரி ரம்யா உட்பட அதிகாரிகள் குழு அங்கு வந்து குழந்தையை மீட்டனர். இந்த வழக்கு தொடர்பாக குழந்தையின் தந்தை ஆதில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், நீண்ட நேரமாக பசியால் வாடியிருந்த குழந்தையின் உடல்நிலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது. குழந்தையின் மருத்துவ பரிசோதனையின் போது, குழந்தையின் உடலில் சர்க்கரை அளவு மிகவும் குறைவாக இருப்பதை மருத்துவர் கவனித்தார். அப்போது குழந்தை பசியால் அழ ஆரம்பித்தது. இதை கவனித்த போலீஸ் அதிகாரி ரம்யா, உடனே டாக்டரிடம், தான் ஒரு வயது குழந்தைக்கு தாய் என்றும், இந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கலாமா என்றும் கேட்டுள்ளார். மருத்துவர் அனுமதித்த தருணத்தில், அந்த குழந்தையை தனது சொந்த குழந்தையாக உணர்ந்து அவர் குழந்தைக்கு பாலூட்டினர்.



கடத்தல் வழக்கில் மீட்கப்பட்ட பிறந்து 12 நாட்களே ஆன பச்சிளம் குழந்தைக்கு பெண் போலீஸ் அதிகாரி ரம்யா பாலூட்டி பாதுகாத்த சம்பவம் அவருக்கு அனைத்து தரப்பிலும் பாராட்டை பெற்றுத்தந்தது. இந்த நிலையில், கேரள ஐகோர்ட்டு நீதிபதி தேவன் ராமச்சந்திரன் பெண் போலீஸ் அதிகாரி ரம்யாவை பாராட்டியுள்ளார். அவரிடம் ஒப்படைக்க மாநில காவல்துறைத் தலைவருக்கு சான்றிதழை அனுப்பியுள்ளார்.

இது குறித்து போலீஸ் அதிகாரி ரம்யாவுக்கு நீதிபதி தேவன் ராமச்சந்திரன் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

நீங்கள் இன்று, காவல் துறையின் சிறந்த முகமாக இருக்கிறீர்கள். ஒரு சிறந்த அதிகாரி மற்றும் உண்மையான தாய் - நீங்கள் இந்த இரு கடமையையும் செய்துள்ளீர்கள்! வாழ்க்கை என்னும் அமிர்தம் தெய்வம் தந்த ஒரு வரம். அதை ஒரு தாயால் மட்டுமே கொடுக்க முடியும். பணியில் இருக்கும் போது நீங்கள் அதை வழங்கினீர்கள். அத்துடன், எதிர்காலத்திற்கான மனித நேயத்தின் நம்பிக்கையை எங்கள் அனைவரிடத்திலும் உயிர்ப்புடன் வைத்திருக்க உதவினீர்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனிடையே, போலீஸ் அதிகாரி ரம்யாவையும் அவருடைய குடும்பத்தினரையும் மாநில காவல்துறைத் தலைவர் அனில் காந்த், காவல்துறை தலைமை அலுவலகத்திற்கு அழைத்து, பாராட்டுச் சான்றிதழை வழங்கினார். அவரது செயல்கள், போலீஸ் படையின் நற்பெயரை உயர்த்தியது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இஸ்லாம் பாடப் புத்தகங்களை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கல்விஅமைச்சர் பணிப்புரை!

## றிஸாட் பதியுதீன் தெரிவிப்பு



இஸ்லாம் பாடப் புத்தகங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் தற்காலிகமாக வழங்குமாறும், எதிர்காலத்தில் பாடப் புத்தகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தங்கள் தொடர்பிலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உடைய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத் துள்ளதாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப் புத்தகத்தை மீள் விநியோகம் செய்தல் தொடர்பாக, நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஹ்பி எச்.இஸ்மாயில் தலைமையிலான குழுவினர், பல அரசியல் பிர முகர்களுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், திங்கட்கிழமை (31) பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை சந்தித்து, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினர்.

அதன் பிற்பாடு, செவ்வாய்கிழமை (01) அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் உட்பட அதன் பிரதிநிதிகளும், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மற்றும் சட்டத்தரணி ஷஹ்பி தலைமையிலான நீதிக்கான மய்யத்தின் உறுப்பினர்களும், கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அவர்களை சந்தித்து, மேற்படி விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

கல்வி அமைச்சருடனான சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரிஷாட் எம்.பி மேலும் கூறியதாவது, "இஸ்லாம் பாடப் புத்தகங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து பாடசாலைகளுக்கும் தற்காலிகமாக வழங்குமாறும், பாடப் புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் சரியா? அல்லது எவ்வாறான திருத்தங்களை செய்ய வேண்டும் என்பதை, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உடைய ஆலோசனைகள் பெற்று, அடுத்த வருடம் வழங்கப்படும் புத்தகத்தில் அதை சேர்த்துக் கொள்ளுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.



மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களை செயற்படுத்துகின்றபோது, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்" என்றார்.

**- மன்னார் நிருபர் (01-11-2022)**

# முல்லைத்தீவு மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம்!

**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்ட செயலக நடப்பாண்டின் நான்காம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் செவ்வாய்கிழமை (01) மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் காலை 10.00மணிக்கு இடம்பெற்றது.

கணக்காய்வு முகாமைத்துவ குழு அமைப்பாளரும், மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளருமான கே.லிங்கேஸ்வரனின் ஏற்பாட்டில மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்பட்டுவருகின்ற மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களின் உள்ளகக் கணக்காய்வு அவதானங்கள், நிதி செயற்பாட்டு முன்னேற்றங்கள், கணக்காய்வு ஐய வினாக்கள், அவற்றுக்கான பதிலளித்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.





மேலும் கடந்த கால கூட்ட அறிக்கை, அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



குறித்த கலந்துரையாடலிலானது குழு உறுப்பினர்களான மாவட்ட செயலக பிரதம கணக்காளர்ம. செல்வரட்ணம், கணக்காய்வு முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் ஜெயசேகர பத்திரங்க சுனில் ஆகியோர் நேரடியாகவும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் கே.ஏ.டி வசந்த குமார, மாவட்ட கணக்காய்வு அத்தியட்சகர் A.ஆதவன் ஆகியோர் இணையவழி செயலி ஊடான பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

மேலும் இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.கி. வில்வராஜா, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு.முபாரக், பிரதேச செயலாளாகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மற்றும் குறித்த விடயங்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் நேரடியாக கலந்து கொண்டிருந்தனர்.



# மன்னார் நகர சபை அதிரடி நடவடிக்கை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## நிலுவையில் உள்ள கட்டணத்தை செலுத்த கால அவகாசம் கோரிய இ.போ.ச மன்னார் சாலை அதிகாரிகள்

மன்னார் நகர சபை பேருந்து நிலையத்தில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் இணைந்த போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், நீண்ட காலமாக இலங்கை அரச போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்கான மாதாந்த கட்டணம் மன்னார் நகரசபைக்கு செலுத்தாத காரணத்தினால் செவ்வாய்க்கிழமை (1) காலை அரச பேந்துகளுக்கான கட்டணம் அறவிட மன்னார் நகர சபையினால் முன் னெடுக்கப்பட்டது.

எனினும் மன்னார் சாலை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து மன்னார் நகர சபையின் தலைவருடன் கலந்துரையாடி நிலுவையில் உள்ள பணத்தை செலுத்த பால அவகாசம் கோரியதோடு, இனி வரும் நாட்களில் மாதாந்த கட்டணத்தை செலுத்துவதாகவும், தெரிவித்த நிலையில், மன்னார் நகர சபை மன்னார் சாலை அதிகாரிகளின் கோரிக்கைகளை ஏற்று போக்குவரத்து சேவையை மேற்கொள்ள அனுமதி வழங்கினர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் நகர சபை பேருந்து நிலையம் மன்னார் நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. குறித்த பேருந்து நிலையம் புதிதாக அமைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மன்னார் நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. குறித்த பேருந்து நிலையத்தில் மன்னார் தனியார் பேருந்துகள் மற்றும் அரச பேருந்துகள் இணைந்து இணைந்த போக்குவரத்து சேவையை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் அரச மற்றும் தனியார் பேருந்து நிர்வாகம் மாதம் மாதம் குறித்த தொகை பணத்தை மாதாந்த வாடகையாக மன்னார் நகரசபைக்கு செலுத்த வேண்டும் என்ற கோரிக்கை காணப்பட்டது. குறித்த கோரிக்கைக்கு அமைவாக தனியார் பேருந்து நிர்வாகம் அன்று முதல் இன்று வரை தமது மாதாந்த வாடகை பணத்தை செலுத்தி வருகின்றனர்.

எனினும் அரச பேருந்து நிர்வாகம் இதுவரை எவ்வித பணமும் செலுத்தவில்லை.மன்னார் நகர சபை இவ்விடயம் தொடர்பாக பல தடவை நினைவூட்டல் கடிதங்கள் மன்னார் அரச பேருந்து நிர்வாகத்திற்கு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (1) காலை 5.45 மணி அளவில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து மன்னார் நகர சபை பேருந்து நிலையத்தின் இரண்டு நுழைவாயில் களையும் மூடி அரச பேருந்திற்கு நாளாந்த நுழைவு கட்டணமாக 100 செலுத்தி டிக்கட்டினை பெற்று உள்ளே செல்ல பணித்தனர்.

வேறு மாவட்டங்களில் இருந்து வந்த அரச பேருந்துகள் கட்டணத்தை செலுத்தி பேருந்து நிலையத்தினுள் சென்றனர். எனினும் மன்னார் சாலைக்கு சொந்தமான பேருந்துகள் கட்டணம் செலுத்தாது வீதி ஓரங்களில் தரித்து நின்றனர்.

இந்த நிலையில் பேருந்து நிலைய பகுதிக்கு வருகை தந்த இலங்கை அரச போக்குவரத்து சபையின் பிராந்திய பொறுப்பதிகாரி மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அதிகாரி ஆகியோர் வருகை தந்து மன்னார் நகர சபையின் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்.

இதன் போது வருகை தந்த இ.போ.ச அதிகாரிகள் நிலுவையில் உள்ள பணத்தை செலுத்த கால அவகாசம் வழங்குமாறும், இனி வரும் காலங்களில் மாதாந்த கட்டணத்தை செலுத்துவதாகவும் தெரிவித்தனர்.




அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மன்னார் நகர சபை போக்குவரத்து சேவையை தொடர்ந்து முன்னெடுக்க அனுமதி வழங்கினர்.



# வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 91 வது நாள் கவனயீர்ப்பு திருகோணமலையில்

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 91 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30) காலை 10 மணியளவில் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தின் பாரதிபுரம் கிராமத்தில் இடம்பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 91 ம் நாள் போராட்டத்தில் பாரதிபுரம் கிராமத்தில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" "நாங்கள் நாட்டை துண்டாட வோ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்".

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் "13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

**- மன்னார் நிருபர்**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா சிறார்களுக்கான போட்டிகள்



## போட்டிகள் நடைபெறும் இடம்: ஆத்மஜோதி இல்லம்

**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

**திருமுறை மனனப் போட்டி**

**நவம்பர் 12, 2022 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்**

**பேச்சுப் போட்டி**

**நவம்பர் 13, 2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்**

# திருமுறைவிழா 2022

## இடம்: சன்னிதி முருகன் ஆலயம்

1085 Bellamy Road, Unit 7-8, Scarborough, Ontario

காலம்: நவம்பர் 19 சனிக்கிழமை (19-11-2022) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 | - | 1-10-2016 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 | - | 1-10-2013 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 | - | 1-10-2010 | க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

**விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும் பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்**

**முருகன் புத்தகசாலை,**
GTA MALL 5215 Finch Ave. E. **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.


**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

# விரும்பினால் படிக்கலாம்; இந்தியை யாரிடமும் திணிக்கவில்லை: அண்ணாமலை கருத்து

விருப்பம் இருந்தால் இந்தி படிக்கலாம். இந்தியை யாரிடமும் திணிக்கவில்லை என்று பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார். தமிழகத்தில் வளர்ந்துவரும் அரசியல் தலைவர்களுக்கான அரசியல் தலைமை, வியூகம் மற்றும் தொடர்பு பற்றிய 3 நாள் பயிற்சி பட்டறையின் தொடக்க நிகழ்ச்சி சென்னை தியாகராய நகரில்நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர்கள், அரசியல் ஆர்வலர்கள், ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆஸ்தர் நிறுவனம் சார்பில் நடந்த இந்த பயிற்சி பட்டறைக்கு அரசியல் வியூக வகுப்பாளர் ஆஸ்பயர் கே.சுவாமிநாதன் தலைமை வகித்தார். பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, மூத்த பத்திரிகையாளர் 'துக்ளக்' ரமேஷ் கலந்துகொண்டு அரசியல் தலைமைத்துவம் குறித்து உரையாற்றினர். அப்போது, அண்ணாமலை பேசியதாவது:உளவியல், வரலாறு, புவியியல்உள்ளிட்ட பல்வேறு படிப்புகள் படித்திருந்தாலும்கூட, அரசியல் அறிவியல் படிப்பு என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஓர் அரசியல்வாதி தனது பணியில் வெற்றி பெறுவதற்கு



ஒரு கருவி தேவைப்படுகிறது. அதற்கான முயற்சிதான் இந்த பயிற்சி பட்டறை. ராணுவம், கார்ப்பரேட், சிவில் சர்வீஸ் உள்ளிட்ட ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைமைத்துவம் இருக்கிறது.

தமிழகத்தில் காமராஜர், எம்ஜிஆர், கருணாநிதி, ஜெயலலிதா, ஓமந்தூரார் உள்ளிட்ட நிறைய ஜாம்பவான்கள் இருந்துள்ளனர். இவர்கள் அந்தந்த காலகட்டத்தில் அவர்களுக்கே உரிய தலைமைத்துவத்தில் வெற்றி கண்டுள்ளனர்.ஆனால், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆகிய 2 அரசியல் தலைவர்களும் அசாதாரணமான சூழ்நிலையில், அரசியலுக்குள் நுழைந்து தங்களை, உருவாக்கி, செதுக்கி, 10 ஆண்டுகாலத்தில் உச்சகட்ட நிலையை அடைந்தவர்கள்.

ஒரு தலைமையின் மிகப்பெரிய வேலை, மற்றொரு தலைமையை உருவாக்குவதுதான். அரசியலுக்கு ஒருவர் வரும்போது, அது நமக்கு தேவையா என யோசித்து முடிவெடுக்க வேண்டும். சரியாகமுடிவெடுக்காத பல அரசியல்வாதிகள் அரசியலில் தோல்வியைசந்திக்கின்றனர். பல அரசியல்வாதிகள் தங்கள் முகத்தை திரை கொண்டு மறைத்து விடுகின்றனர். வெளிப்படை தன்மையுடன் இருந்தால்தான் அரசியலில் வெற்றி பெறமுடியும். புதிய கல்விக் கொள்கை குறித்துகஸ்தூரி ரங்கன் தலைமையிலான குழு சமர்ப்பித்த அறிக்கையில் இந்தியை கட்டாய மொழியாக்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், அமைச்சரவை 3வது விருப்ப மொழியாகத்தான்இந்தியை கொண்டு வந்தது. பாஜக,யாரிடமும் இந்தியை திணிக்கவில்லை. திணிக்கவும் செய்யாது. இவ்வாறு அவர் பேசினார்.

# ஆளுநருக்கு சொந்தக் கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது : ஆளுநர் தமிழிசை



டெல்லி நேரு யுவகேந்திரா சார்பில் காலாப்பட்டு, புதுச்சேரி பல்நோக்கு சமூக சேவை மையத்தில் நடைபெற்ற "அரசு சாரா அமைப்பு மேலாண்மைஆதாரம் மேம்பாடு" குறித்த மாநில அளவிலான கருத்தரங்கினை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தார்.பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், ''புதுச்சேரியில் கடல்சார் உயிரினங்கள் காட்சியகம் அமைக்கவும், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ந்து வந்து பார்க்கும் அளவுக்கு கடற்கரை மேலாண்மை செய்யவும் ஆலோசனை செய்யப்பட்டது.

புதுச்சேரியில் ரூ.50 முதல் 60 கோடி வரை கடல் மேலாண்மை திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அப்படி வரும்போது புதுச்சேரியில் கடல் அரிப்பு தடுக்கப்பட்டு மீனவர்கள் இன்னும் அதிக பாதுகாப்பாக இருப்பார்கள்.இத்தகைய திட்டங்களை நாம் முன்னெடுத்து செல்கிறோம். மத்திய அரசு நமக்கு போதிய உதவிகளை செய்து வருகிறது. மத்திய கடல்சார் அமைச்சக குழுவினர் முதல்வரையும் சந்தித்தார்கள். என்னையும் சந்தித்தார்கள். இதன்மூலம் கடலோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதை உறுதிப்படுத்தலாம்.'' என்றார்.

அப்போது, மத்திய அரசு, அரசு சாரா அமைப்புகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்தது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு, ''அரசு சாரா அமைப்புகள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதற்காக ஒழுக்கப்படுத்தி இருக்கிறார்கள். இதனால் யாரும் பாதிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா அமைப்புகள் பெருந்தொற்று நேரத்தில் ஆற்றிய சேவையின் பங்கை பாரத பிரதமர் நேரடியாக பாராட்டினார். விழிப்புணர்வு ஏற்படுத்துவது, தடுப்பூசி கொண்டுவருவதில் அவர்களுடைய பங்கு முக்கியமானதாக இருந்தது என்பதை தெளிவாக கூறியிருக்கிறார். டெல்லியில் மத்திய சுகாதார அமைச்சரைப் பார்த்தேன். புதுச்சேரியில் அரசு மருத்துவமனைகள் மேம்படுத்த திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

மத்திய அமைச்சரிடம் நீண்ட விவாதம் நடத்தினேன். ஆரம்ப சுகாதார நிறுவனங்களும் மேம்படுத்த வேண்டும், ரூ.1 கோடி செலவில் 100 படுகைகள் கொண்ட போதை மறுவாழ்வு மையம் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன்.அது மட்டுமல்ல மருத்துவ பல்கலைக்கழகம் ஏற்படுத்தினால் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்யலாம். அதற்கும் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் வழி மருத்துவ கல்லூரி கொண்டு வருவதற்கும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். நல்ல விவாதம் நடைபெற்றது. அதன் மூலம் புதுச்சேரி மக்கள் நிச்சயமாக பயன்பெறுவார்கள்.'' என்று தெரிவித்தார். அதேபோல், தமிழக ஆளுநரை திரும்பப்பெறும் கோரிக்கையை சில அரசியல் கட்சிகள் வைப்பது குறித்த கேள்விக்கு, ''இது தேவையில்லாதது என்று நினைக்கிறேன். ஆளுநருக்கு அவரின் சொந்தக் கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது. அவருடைய கருத்து உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் எதிர்கருத்து சொல்லலாம். ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காகவே ஒரு ஆளுநரை திரும்ப பெற வேண்டும் என்பது உயர்ந்த அரசியலமைப்பு பதவியில் இருப்பவரை அவமதிப்பது. இது சரியல்ல என்பது என் கருத்து. கருத்து சுதந்திரம் சாதாரண குடிமகன் முதல் அனைவருக்கும் இருக்கிறது.'' என்றார்.

# 1037 வது சதய விழாவையொட்டி தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனுக்கு மரியாதை: பெருவுடையாருக்கு 48 பொருட்களால் பேரபிஷேகம்

தஞ்சாவூரில் நேற்று நடைபெற்ற மாமன்னன் ராஜராஜ சோழனின் 1,037வது சதய விழாவை முன்னிட்டு பெரியகோயில் முன்பு உள்ள ராஜராஜன் சிலைக்கு மாலைஅணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தஞ்சாவூர் பெரியகோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்ததால், ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் ராஜராஜ சோழன் சதய விழா வெகு விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம், அதன்படி, நிகழாண்டு சதய விழா நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

தொடர்ந்து, நேற்று காலை மங்கள இசையுடன் விழா தொடங்கியது.பின்னர், தருமபுர ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கோயில் பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கினார். தொடர்ந்து, ராஜராஜசோழன் மீட்டெடுத்த, திருமுறை நூல்களுக்கு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டு, யானை மீது வைத்து மங்கள வாத்தியங்கள் முழங்க, சிவ பூத இசைக்கருவிகள்



வாசிக்கப்பட்டு, கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜ சோழன் சிலைக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.இதில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த 48 ஓதுவார்கள், தேவாரப் பாடல்களை பாடியபடி வந்தனர்.

அங்கு, மாமன்னன் ராஜராஜசோழன் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், எஸ்.பி. ரவளிப்பிரியா, சதய விழா குழுத் தலைவர் து.செல்வம், அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன்பின், பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகளைச் சேர்ந்தோர் சிலைக்கு மாலை அணிவித்தனர். தொடர்ந்து, பெரிய கோயிலில் உள்ள ராஜராஜசோழன், உலகமாதேவி ஐம்பொன் சிலைகள் முன்பாக புனித நீர் அடங்கிய கடங்கள் வைத்து சிவாச்சாரியர்கள் சிறப்பு யாகம் நடத்தினர். அப்போது, ராஜராஜசோழன், உலகமாதேவி சிலைகளுக்கு ராஜ அலங்காரம் செய்யப்பட்டது.

தொடர்ந்து, பெருவுடையாருக்கும், பெரியநாயகி அம்மனுக்கும் மஞ்சள், சந்தனம், பால், தயிர்உள்ளிட்ட 48 மங்களப் பொருட்களால் பேரபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது.

**உதயனின் பிரத்தியேகச் செய்தி**

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை?

## (கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம்-02)



**யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

வன்னி மண் கொடுத்துச் சிவந்த மண். அதற்குச் சரித்திர சான்றுகள் ஏராளம். அதன் அளப்பரிய வளங்கள் நூற்றாண்டுகளாக மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக இருந்துள்ளன. வந்தாரை வாழவைக்கும் பூமி வன்னி பெருநிலப்பரப்பு.

ஆனால், குன்றாத வளங்கள் இருந்தும் அங்குள்ள மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளது வரலாற்றுச் சோகம். போர்க்களமாக இருந்த அந்த பூமியில் இரண்டு தலைமுறையினர் சிக்கினர். ஒரு தலைமுறையினர் போருக்கு பிந்தைய காலத்தில் பிறந்தவர்கள். ஆனால் அனைவருக்கும் பொதுவான பிரச்சனைகள் உள்ளன. போர்க் காலத்தில் கட்டுமான வளங்கள் அழிந்தன. அது உண்மை. பாடசாலைகள், மருத்துவமனைகள், வியாபார நிறுவனங்கள் போன்ற மக்கள் பயன்பாட்டு இடங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாயின.

போருக்குப் பின்னரான காலத்தில், "வடக்கின் வசந்தம்" என்ற திட்டத்தின் கீழ் சில அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றன.

எனினும், இந்த அபிவிருத்திகளால் யார் பயனடைந்தார்கள் என்பது மிகப்பெரும் கேள்வி. அதேவேளை அந்த முன்னேற்றம் இராணுவத்தினரின் பயணம் மற்றும் நிலப்பயன்பாட்டை அதிகரித்தது. காலங்காலமாக வாழ்ந்துவந்த தமிழர்கள் தமது வாழ்வாதாரங்களையும், வளங்களையும் பறிகொடுக்கும் நிலை மெல்ல மெல்ல, ஆனால் சீராகத் தொடர்ந்து நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள், தலங்கள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டு அபகரிக்கும் பணிகள் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டன/ முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு குருந்தூர்மலை ஆதிசிவன் அய்யனார் ஆலய இடத்தில் சட்டத்தையும் மீறி ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது ஒரு சிறந்த உதாரணம். அந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில் பாரம்பரியமாக மீன்பிடித்து வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் தமிழர்களின் உரிமை கூட பறிக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறிய இடத்தில் மக்கள் சுதந்திரமாக தமது தொழிலைச் செய்ய முடியாத சூழல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகிறது என்பதே யதார்த்தம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 1,38,516 மக்களிற்கு மட்டும் நிலப்பற்றாகுறை நிலவவில்லை அந்த மாவட்டத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பிடிக்கும் 1,17,801 கால்நடைகளிற்கும் மேய்ச்சல் பரப்போ அல்லது மாரி மழையின்போது மாற்று இடமின்மை காரணமாகவும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாடுகள் அதன் உரிமையாளர்களின் கண் முண்ணே இறந்து விழும் அவலம் இன்றுவரை இடம்பெறும் அந்த மாவட்டத்தில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அவலத்திற்கு அரச நிர்வாக இயந்திரமே காரணமாக உள்ளதில் அதிக பங்கு வகிக்கும் திணைக்களங்களான வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன உள்ளதை முதல் பாகத்தில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அதற்கான ஆதாரமாக மாவட்டத்தில் இந்த இரு திணைக்களத்தின் நிலை தொடர்பான புள்ளிவிவரம் பலரை தலைசுற்ற வைக்கும். ஏனெனில் மாவட்டத்தின் மொத்த பரப்பளவானது 2,41,500 ஹெக்டேயர் அல்லது 5,96,505 ஏக்கர் அளவீட்டைக் கொண்ட நிலப்பரப்பாகும். இதிலே வனவளத் திணைக்களமானது 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் 81,881 ஹெக்டேயர் நிலங்களை உரிமைகோரி அரச இதழ் பிரசுரித்துள்ளதோடு




2009 ஆம் ஆண்டிற்கும் 2015 ஆண்டிற்கும் இடையில் 67,806 ஹெக்டேயர் நிலங்கள் தமது திணைக்களத்தின் ஆளுகை என அரச இதழ் பிரசுரித்துள்ளனர்.

இவற்றின் பிரகாரம் 3,69,726 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தின் பிடிக்குள் சென்றுவிட்டது. இதிலே 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரச இதழ் வெளியிட்ட நிலங்களிற்கு இன்றுவரை நில அளவைகூட செய்யப்படவில்லையென மாவட்டச் செயலகமும் உறுதி செய்கின்றது.

இதேபோன்று இலங்கையில் நிலவிய "நல்லாட்சி" எனச் சொல்லப்பட்ட காலத்திலும் நிலங்களை அபகரிக்க இந்த திணைக்களம் தவறவில்லை. இக்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 17,259 ஹெக்டேயர் அல்லது 42,623 ஏக்கர் நிலம் மேலும் சுவீகரிக்கப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் தற்போது முல்லைத்தீவில் மட்டும் ஒரு 1,66946 ஹெக்டேயர் அல்லது 4,12,356 நிலம் வனவளத் திணைக்களத்திடம் மட்டும் உள்ளது.

இதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகையின் 8,517.9 ஹெக்டேயர் அல்லது 21,037 ஏக்கர் நிலம் காணப்படுகின்றது. அரச திணைக்களங்கள் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நலன்களைப் புறந்தள்ளி இவ்வாறு வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் வளமான பகுதிகளைக் கையகப்படுத்தியுள்ளது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதித்துள்ளது.

ஆனால் இந்த திணைக்களங்கள் தாம் கையகப்படுத்திய நிலங்களை எந்தளவிற்கு நாட்டிற்கும் மக்களிற்கும் பயனுள்ளதாக மாற்றியமைத்தது என்ற கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை.




இலங்கையைப் போன்றே உள்நாட்டு யுத்தத்தில் சிக்கித் தவித்து பிறகு மீண்டெழுந்த பல லத்தீன் அமெரிக்க நாடுகள் அங்கிருந்த அபரிமிதமான காடுகளை, அவற்றை அழிக்காமல் மக்கள் பயன்பாட்டிற்கு எப்படிக் கொண்டு வந்து குறிப்பாகக் கரையோர மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தியது என்பதை அறிந்து இலங்கை ஆட்சியாளர்கள் பாடம் படிக்க வேண்டும்.

இந்த இரு திணைக்களங்களின் பிடியில் மட்டும் மாவட்டத்தின் 67.08 வீதமான நிலப்பகுதிகள் வனப் பகுதியாக மட்டுமே முல்லைத்தீவில் பேணப்படும் சூழலில் எஞ்சிய 32.92 வீதமான பகுதியே நிர்வாக, வாழ்வாதார, தொழில் முயற்சி மற்றும் கற்றல் செயற்பாட்டு நிலங்களாக காணப்படுகின்றது. இந்த 32.92 வீதமான நிலங்களிலும் 2.18 வீதமான நிலங்கள் சதுப்புநிலங்களாக எந்தவொரு பாவனைக்கும் ஏற்புடையதற்றுக் காணப்படுவதனையும் மாவட்டச் செயலக புள்ளிவிவரம் உறுதி செய்கின்றது. அதன் அளவு மட்டும் 14,493 ஏக்கரைத் தொட்டு நிற்கின்றன. இவற்றின் அடிப்படையில் மாவட்டத்துன் மொத்த நிலமான 5,96,505 ஏக்கர் நிலத்தில் இரு திணைக்களத்திடம் 4,33,393 ஏக்கரும் சதுப்பு நிலம் 14,493 ஏக்கருமாக மொத்தம் 4,47,886 ஏக்கர் நிலம் போனால் எஞ்சிய நிலமாக 1,47,112 ஏக்கர் நிலம் மட்டுமே எஞ்சிய அனைத்து விதமான செயல்பாட்டிற்கு உள்ளன.

இவை அனைத்திற்கும் அப்பால் மாவட்டத்தில் 35,403 ஹெக்டேயர் அல்லது 87,447 ஏக்கர் நிலம் விவசாய நிலமாக காணப்படுகின்றது.

அதாவது மாவட்ட நிர்வாக அலகின் ஆளுகையில் இருப்பதாகக் கூறப்படும் 1,47,112 ஏக்கர் நிலத்திலும் 87,477 ஏக்கர் விவசாய நிலம் தவிர்க்கப்பட்டால் அல்லது விவசாய பாவனையெனில் - வெறுமனே 61,172 ஏக்கர் நிலம் மட்டுமே அங்கே அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய காணப்படுகின்றது.

புள்ளி விவரங்கள் வாசிப்பதற்கு உளைச்சலாகவும் தலைச்சுற்றுவதாகவும் இருக்கலாம். ஆனால் ஆழமான புரிதல் மற்றும் பிரச்சனைகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு அந்த எண்ணிக்கைகள் மிகவும் அவசியமானவை. எதிர்காலத் திட்டமிடலுக்குப் புள்ளி விவரங்கள் இன்றியமையாதவை என்பதாலேயே மிகவும் சிரமங்களுக்கு இடையே சேகரிக்கப்பட்ட தரவுகள் இங்கு அளிக்கப்பட்டுள்ளன.

இந்த 61,172 ஏக்கர் நிலத்திலேயே மக்களின் 30 ஆயிரம் வரையான வாழ்விடங்கள் உள்ளன. இதிலிருந்து மிகவும் விலாசமான நிலப்பரப்புள்ள ஒரு மாவட்டத்தில் மக்கள் எப்படியான சன நெருக்கடியில் வாழ்கிறார்கள் என்பதை ஊகிக்க முடியும். குறைந்த நிலப்பரப்பில் மக்கள் செறிந்து வாழும் போது, வளங்கள் இருந்தும் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.



அந்த நெருக்கடியைத் தீர்க்க அரசு ஏன் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. திட்டமிடலில் என்ன குளறுபடிகள் என மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்து கேட்டாலும், அதற்கு உரிய பதில்கள் அளிக்கப்படுவதில்லை. இதற்கு மிக முக்கியமான காரணம் தேவைக்கும் அதிகமாக அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவப் பிரசன்னமே காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

மாவட்டத்தின் நிர்வாக விடயங்கள் ஏனைய பொதுப்பயன்பாடுகளுக்கென முல்லைத்தீவு மாவட்டத்திலே 300ற்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. இந்த 300 குளங்களில் 100 குளங்கள் வனவளத் திணைக்கள பகுதிகளில் இருந்தாலும் எஞ்சியவை வெளிப் பிரதேசத்திலும் உள்ளன. மூன்றில் ஒரு பங்கு நீர் ஆதாரம் வனவளத் திணைக்களப் பகுதியில் இருந்தாலும், வனப் பாதுகாப்பிற்குப் பாதகம் வராமல் அந்த நீரை மக்களின் வாழ்வாதாரங்களுக்கு முழுமையாக பயன்படுத்த முடியும். வனவள திணைக்களத்தின் நிர்வாகப் பகுதிகளில் மக்கள் எட்டியும் பார்க்க முடியாதபோதும் இராணுவத்தினர் மட்டும் எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி சென்றுவர முடியும். அது அன்றாடம் நடைபெறுகிறது.

இதே நேரம் நிர்வாக ரீதியிலான நிலத்திலேயே மாவட்டத்தின் இரு கல்வி வலயங்களான துணுக்காய், முல்லைத்தீவு ஆகியவற்றின் கீழ் மாணவர்களிற்கான 127 பாடசாலைகளும், மாவட்டச் செயலகம், 6 பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் அலுவலகம் அல்லது பொது நோக்கு மண்டபம், பிரதேச சபைகள், கமநல சேவை நிலையங்கள், மத்திய மாகாண அரச திணைக்களங்களிற்கான அலுவலக கட்டிடங்களும் அமையப் பெற்றுள்ளன. இவற்றிற்கும் கணிசமான நிலங்கள் போகும்.

இவ்வாறு மேற்சொன்ன புள்ளி விவரங்களே அந்த மாவட்டத்தின் வறுமைக்கு பிரதான காரணமாகவுள்ளது.

அரச நிர்வாக இயந்திரமே என்ற எனது கூற்றை மெய்ப்பிக்கும் தற்போது பலரும் ஏற்பீர்கள் என நம்புகின்றேன்.



இந்த நிலையில் மனித பாவனைக்கும் கால் நடைகளின் உணவுத் தேவைக்கும் என வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் பிடித்துள்ள நிலங்களில் இருந்து உடனடியாக 17,710 ஹெக்டேயர் அல்லது 43,743 ஏக்கர் நிலத்தை மீள விடுவிக்க வேண்டும் என மாவட்ட செயலகம் அவசரமாக கோரி நிற்கின்றது.

மாவட்டச் செயலகத்தில் கோரிக்கை கொழும்பிலுள்ளவர்கள் காதில் விழுமா?

இந்த அவலங்கள் இவ்வாறு இருக்க அங்கே முன்னேற்றங்களுக்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் செயல்பாட்டற்று அல்லது கைவிடப்பட்டுக் காணப்படுகின்றன. அந்த அவலங்களை இத்தொடரின் அடுத்த பகுதியில் பார்ப்போம்.

*(அவலப் பட்டியல் நீளும்)*

# 'அரசியல் கைதிகள்': இலக்கணமில்லாத கொடுமை

**- சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**




**சி**ல சம்பவங்கள் ஒரே சமயத்தில் சந்தோஷத்தையும் சங்கடத்தையும் ஏற்படுத்தும். நாம் நிகழ்வின் எப்பக்கம் நின்று பார்க்கிறோம் என்பதைப் பொறுத்து அது அமையும்.

அதே போன்று தான் கேலிச் சித்திரமும். பொதுவாகவே ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் என்றால், கேலிச் சித்திரம் பத்தாயிரம் வார்த்தைகளுக்குச் சமமாகும் என்பது பொதுவான புரிதல்.

ஒரு சம்பவம் தொடர்பான காணொளி ஒன்றை அண்மையில் சமூக" ஊடகங்களில் காண நேர்ந்த போது இதயம் கனத்தது. அந்த சம்பவம் எதை வெளிப்படுத்தியது-அங்கீகாரத்தையா அல்லது அவமானத்தையா என்பதைப் பகுப்பாய்வு செய்ய எனக்கு ஓரிரு நாட்கள் தேவைப்பட்டன. இறுதியாக ஒரு வகையில் அவமானமாகப் பார்க்கப்பட்டாலும், அங்கீகாரம் என்பதே அதில் விஞ்சியிருந்தது என்று நான் கருதுகிறேன்.

இலங்கையின் மிக உயர்ந்த அரச இலக்கிய விருது 14 ஆண்டுகளாக அரசியல் கைதியாகச் சிறையில் இருக்கும் சிவலிங்கம் ஆரூரனுக்கு வழங்கப்பட்டதையடுத்து, அவர் அந்த விருதைப் பெற்றுக்கொண்ட சம்பவத்தைக் காணொளி வாயிலாக சமூக ஊடகத்தில் பார்த்த போதே எனக்குள் அந்த தாக்கம் ஏற்பட்டது.

அவருக்கு விருது வழங்கப்பட்டது மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவரது படைப்பை வாசித்துள்ளவன் என்கிற வகையில் அதில் எனக்கு சந்தோஷம். ஆழமான கருத்துக்களை யதார்த்தமான சூழல்களை மையப்படுத்தி, வாசிப்பவர்களை உருகச் செய்யும் எழுத்து வன்மை அவரிடம் உள்ளது. அவரது முதல் படைப்பான "யாழிசை" புதினத்தை வாசித்தவர்களுக்கு அது புரியும்.

அதே காணொளி எனக்குள் ஒரு வகையான சங்கடத்தை ஏற்படுத்தியது. நாட்டின் ஆகச் சிறந்த இலக்கிய விருதான சாகித்திய விருதை அவர் பெறும் போது, அவர் ஒரு அரசியல் கைதியாகச் சிறையில் இருப்பவர் என்பதற்காக அவரை மேடைக்கு ஒரு பொலிஸ் அதிகாரி அழைத்து சென்று விருதைப் பெற்றவுடன் உடனே மீண்டும் அழைத்து வந்தது எனக்கு நெருடலை ஏற்படுத்தியது.

அவரை அரசியல் கைதியாக நீண்டகாலமாகச் சிறையில் அடைத்துள்ளது சரியா தவறா என்பதை பார்ப்பதற்கு முன்னர், பரிசளிப்பு விழாவில் நடத்தப்பட்ட விதம் சரியா என்ற கேள்வி எழுகிறது. அது தவறு என்று நான் கருதுகிறேன். அடிப்படையில் அந்த பரிசளிப்பு உள்ளரங்கில் நடைபெற்ற ஒரு நிகழ்வு, மேலும் உள்ளேயும் வெளியேயும் போதியளவிற்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அப்படியிருக்கும் போது அவர் மேடைக்குச் சென்று விருது பெறும் அந்த மிகக் குறுகிய நேரத்திற்கும் கூட ஒரு பொலிஸ் அதிகாரி உடன் சென்று, அவர் ஒரு "கைதி" என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டுமா என்பதே எனது கேள்வி.

அது தேசிய விருது பெறும் ஒரு படைப்பாளியைச் சிறுமைப்படுத்துவது போலாகாதா? சிறையில் இருந்தாலும் இலக்கிய பங்களிப்புச் செய்த அவரை விழா மேடையிலிருந்தவர்களோ பரிசளித்தவர்களோ வாழ்த்தி உரையாற்றினார்களா என்பது எனக்குத் தெரியாது. அந்த நிகழ்ச்சியின் முழுமையான காணொளியை நான் பார்க்கவில்லை என்பதே உண்மை.

இலங்கையில் நீண்டகாலமாகவே இந்த "அரசியல் கைதிகள்" பிரச்சனை பெரும் பிரச்சனையாகவுள்ளது. தொடர்ச்சியாக வந்த அரசுகள் நாட்டில் "அரசியல் கைதிகள்" என்று யாரும் இல்லை என்கிற ஒரு நிலைப்பாட்டில் உள்ளது. ஆனால் தமிழ் தரப்போ அவர்கள் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டதால் பழிவாங்கும் நோக்கோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று வாதிடுகின்றனர்.

அதேவேளை அரச தரப்போ சிறையில் இருப்பவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என்று கூறுகிறது.




ஒருவர் நாட்டின் சட்டத்தின் கீழ் தவறிழைத்திருந்தால், அது முறைப்படி சட்டரீதியாக நியாயமான விசாரணை மூலம் நிரூபிக்கப்பட்டிருந்தால், அதற்கான வரையறுக்கப்பட்ட தண்டனை அளிக்கப்பட்டு அந்தக் காலம் முடிந்த பிறகு விடுவிக்கப்பட வேண்டும். அல்லது அவர் குற்றமற்றவர் என்றால் விடுதலை செய்யப்பட்டு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இதுவே உலகப் பொது முறை.

இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த அரசுகள், தமிழர்கள் தமது உரிமைகளைக் கோரும் போது, அவர்களை அடக்குமுறை வழிகளைக் கையாண்டு, காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல்களை நடத்தியதும், சிறையில் அடைத்து சித்திரவதை செய்தது, இன்றளவும் செய்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. சில வேளைகளில் பெரும்பான்மையின சிங்களவர்களும்-அதிலும் குறிப்பாக அரசிற்கு எதிரான நிலைப்பாடுகளை எடுப்பவர்களை கடுமையாக தாக்குவதை பண்டாரநாயக்க தொடங்கி ரணில் அரசு வரை செய்து வருகிறது.

அண்மையில் கூட அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் முன்னெடுத்த அரசிற்கு எதிரான போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஒரு புத்தபிக்கு கூட கைது செய்யப்பட்ட பிறகு மோசமாக நடத்தப்பட்டுள்ளார், அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்று மனித உரிமை அமைப்புகளும் ஆர்வலர்களும் கோரி வருகின்றனர். ஆனால் ராஜபக்சக்களின் "பினாமியாக" ஆட்சி செய்யும் ரணில் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை.




சரி, மீண்டும் சிவலிங்கம் ஆரூரன் விஷயத்திற்கு வருவோம். அவர் பொறியியல் படித்த பட்டதாரி. அதிலும் விமானவியல் பொறியாளர் என்று அறிகிறேன். அவர் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகள் ஆகின்றன. அவர் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார், வழக்கு பதியப்பட்டு விசாரணை நடைபெறுகிறதா என்பதெல்லாம் பொது வெளியில் இல்லை. குறைந்தபட்சம் அவர் மீது என்ன குற்றச்சாட்டுக்கள் என்பதையாவது அரசு தெரிவித்திருக்க வேண்டும். நானறிந்தவரை அவர் மீது முறையாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் அவரை இன்னும் எவ்வளவு காலம் அரசு சிறையில் வைத்திருக்கும் என்பதெல்லாம் ஆட்சியில் இருப்பவர்களுக்கே வெளிச்சம்.

அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக குரல் கொடுக்கும் பிளவுபட்டு நிற்கும் தமிழ் கட்சிகள் கூட, "அரசியல் கைதிகள்" என்று அவர்கள் கூறுபவர்கள் குறித்து முறையான ஆவணங்களைத் தொகுத்து பொதுவெளியில் பகிர்ந்துள்ளார்களா என்றால் அதுவும் இல்லை. அவர்களுக்கு தேர்தல் காலம், அல்லது புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து அழுத்தம் வரும் போது, அரசியல் கைதிகள் விடுதலைக் குறித்துப் பேசுவார்கள்.

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளிலும் சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து பொதுவாகப் பேசுகிறார்களே தவிர, பொதுவான ஒரு நிலைப்பாடு அல்லது செயற்திட்டமோ இல்லை. அடிப்படையில் அவர்களிடம் ஒற்றுமையில்லை என்பதே கசப்பான உண்மை. அனைத்து கட்சியிலும் உள்ள சட்ட வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவை இதற்கென தனியாக அமைத்து, தொடர்ச்சியாக அதை பின் தொடர்ந்து, தனித்தனியாக அலசி ஆராய்ந்து முடிவு காண்பது கடினமான காரியமாக இருக்க முடியாது. ஆனால் கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு அதைச் செய்வதற்கு அவர்கள் முன்வருவார்களா என்பதே கேள்வி.

"பயங்கரவாத நடவடிக்கைகளில்" ஈடுபட்டார்கள், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தார்கள் அல்லது அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள் என்று அரசு கூறினாலும், கைது செய்யப்பட்டவர்களை வழக்கு விசாரணைக்கு உட்படுத்தி தண்டனை வழங்குவதிலோ, அல்லது அரசால் "புனர்வாழ்வு நடவடிக்கைகள்" என்று அவர்களால் வெளியுலகத்திற்குக் கூறப்படுவதற்கு உட்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு விடுவித்து சமூகத்தில் மீண்டும் இணைய வழி செய்யலாமே.




அண்மையில் அபூர்வமாக சில தமிழர்களை ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு விடுவித்தது. அதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கோவில் பூசகர் ஒருவரும் அடங்குவார். கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர்தல் சமயத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புபட்டிருந்தார் என்று கூறி மட்டக்களப்பைச் சேர்ந்த ரகுபதி சர்மா அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இப்போது அவரை விடுவிக்கலாம் அதில் தனக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்று சந்திரிகா அரசிற்கு கடிதம் எழுதியதை அடுத்து அவர் 23 ஆண்டுகளுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டுள்ளார். இனி அவருக்கு வாழ்க்கை என்று ஏதாவது உள்ளதா?

எனினும் சிவ ஆரூரனின் நிலைமை சற்று வித்தியாசமானது என்று நான் கருதுகிறேன். பொறியாளரான அவர் விடுவிக்கப்பட்டால் அவரால் நாட்டிற்கு நல்லதொரு பங்களிப்பை அளிக்க முடியும். அதுமட்டுமின்றி அவர் ஒரு சிறந்த படைப்பாளி. அவரது இலக்கிய பங்களிப்பு நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தரக் கூடும். அவரது படைப்புகள் ஆங்கிலம், சிங்களம் உட்பட இதர மொழிகளில் மொழிபெயர்க்கப்படலாம். அப்படியான சூழலில் அவரது கைது பேசுபொருளாகும் போது, அரசிற்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும். அதாவது படைப்பாளிகளை ஒடுக்கும் அரசு என்ற அவப்பெயர் ஏற்படும்.

எனவே, நாட்டிற்குச் சிறந்த இலக்கிய பங்களிப்பையும், தனது கல்வியின் மூலம் மேலும் பங்களிப்பையும் செய்யும் வாய்ப்பு உள்ள ஒருவரை விடுதலை செய்வது நல்லதொரு முன்னெடுப்பாக இருக்கும்.

அதை ரணில் அரசு முன்னுரிமை அடிப்படையில் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் ஒரு பன்னாட்டுச் செய்தியாளர் என்ற வகையில் முன்வைக்கிறேன். அப்படி அவர் செய்ய வருவாராயின் ஓரளவேனும் தமிழ் மக்களுக்கு ஆறுதலை அளிக்கும் நடவடிக்கையாகவும், நல்லிணக்கத்திற்கான ஒரு சிறிய நகர்வாகவும் இருக்கும்.



இதேவேளை இன்றைய தமிழ் இலக்கிய பிதாமகர்களில் ஒரு-வரும், அற்புதமான படைப்பாளியும், கனடா இலக்கியத் தோட்டம் என்ற அமைப்பை உருவாக்கி, உலகெங்கும் உள்ள தமிழ் படைப்பாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து கௌரவித்து, தமிழிற்கும் இலக்கியச் செறிவிற்கும் சிறப்பு சேர்க்கும் ஐயா அப்பாத்துரை முத்துலிங்கம் சிவ ஆரூரனின் இலக்கிய பங்களிப்பை அங்கீகரித்து, அவருக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் விருதைளிக்க வேண்டும் எனவும் கனடா உதயனின் இந்த கட்டுரை மூலம் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைக்கிறேன்.

அவரது முதல் படைப்பான "யாழிசை" புதினத்தை ஒருமுறையல்ல இருமுறை வாசித்து நெகிழ்ந்து கண்ணீர் சிந்தியவன் என்ற வகையிலும், முன்னெப்போதும் இருந்திராத வகையில் முதல் முறையாக பிபிசி தமிழோசையில் அந்த புத்தகத்தை நூல் மதிப்புரை செய்தவன் என்கிற வகையிலும் அவரது எழுத்தின் வீச்சையும் வசீகரத்தையும் நான் அறிவேன். ஒரு முன்னாள் போராளியைப் போருக்கு பிறகு சமூகம் எப்படிப் பார்த்தது, ஒருவரை போராளியாக போற்றிய சமூகம் போர் முடிந்த பிறகு அவர்களை எப்படி நிர்கதியாக கைவிட்டது என்கிற கருவை ஒரு பெண் போராளியின் பார்வையிலிருந்து அற்புதமாக எழுதியிருப்பார் சிவலிங்கம் ஆரூரன். இதுவரை வாசிக்காதவர்கள் அவசியம் வாசிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறேன்.

# வலி. வடக்கு முழுமையாகப் பறிபோகிறதா?

- எமது யாழ் செய்தியாளர்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினரின் பிடியில் இருக்கும் 3 ஆயிரத்து 427 ஏக்கர் நிலத்தில் இருந்து எந்தவொரு பகுதியும் மிஞ்சாதோ என்ற அச்சம் காரணமாக மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தயாராகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போதும் படையினரிடம் இருக்கும் நிலத்தில் அதிக நிலம் வலி. வடக்கில் உள்ளது இங்கே 2,467 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. இதில் இராணுவத்தினரின் பிடியில் 1,614 ஏக்கர் நிலம் உள்ள அதே நேரம் எஞ்சியவை ஏனைய பாதுகாப்பு பிரிவுகளிடம் உள்ளது.

இவ்வாறு வலி. வடக்கில் இராணுவத்தினர் வசம் உள்ள மக்களிற்குச் சொந்தமான 1,614 ஏக்கர் நிலத்தையும் முழுமையாகச் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2022-09-23 அன்று காணி அமைச்சின் மேலதிக செயலாளர் ரேணுகாவினால் தெல்லிப்பளை பிரதேச செயலாளருக்கு ஓர் கடிதம் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டது. வலி. வடக்கு தொடர்பில் அதன் உரிமையாளர்கள் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து விட்டு அதன் முடிவிற்காக காத்திருக்கும் நிலையில் அடுத்த தவணை விசாரணை நவம்பர் மாதம் 8 ஆம் திகதி உள்ளது.

இதேநேரம் வலி. வடக்கில் மீனவர்களின் முக்கிய இறங்குதுறையானது "நல்லாட்சி" என சொல்லப்பட்ட காலத்தில் நீண்ட முயற்சியின்பால் விடுவிக்கப்பட்டபோதும் அதன் உச்ச பயனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கும் படையினர் வசம் உள்ள நிலம் தான் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.



இந்த துறைமுகத்தைப் பயன்படுத்திய பல நூற்றுக் கணக்கான மீனவர்கள் இன்றும் முகாம்களிலும் உறவுகள் வீடுகளிலும் வாழும்போதும் அவர்களிற்குச் சொந்தமான 212 ஏக்கர் நிலம் தொடர்ந்தும் படையினர் வசமே உள்ளது, இதனை விடுவிக்குமாறு கோரியபோது கொள்கை அளவில் ஆமோதித்த இராணுவம் தற்போது மறுக்கின்றது.

இதேபோன்று வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் எனச் சொல்லப்படும் பகுதியில் தற்போதும் பலாலி வீதிக்குக் கிழக்கே உள்ள 612 ஏக்கர் நிலம் வலிந்த அபகரிப்பில் உள்ளது. இந்த நிலத்தை விடுவிப்பது தொடர்பாகவும் நீண்ட பேச்சுக்கள் இடம்பெற்றதோடு இறுதியாக கோட்டாபய அரசின் கீழ் தற்போதைய மீன்பிடி அமைச்சர் மாவட்ட மேலதிக அரச அதிபரை (காணி) கொழும்பு வரை அழைத்து விடுவிக்கப்பட வேண்டிய நில விபரங்களைத் திரட்டியதோடு தனியான வரைபடமும் தயார் செய்யப்பட்டது. அவை படத்துடனேயே முற்றுப்பெற்றதே தவிர எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஆகிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் இவ்வாறெல்லாம் விடுவிக்கப்படும் என நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கூண்டோடு இராணுவ மயமாக்கும் முயற்சியாக அளவீட்டை மேற்கொள்ள பிரதேச செயலாளருக்கு அறிவித்திருப்பது மக்களிடையே பெரும் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. வலி வடக்கு மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் தனியார் நிலங்கள் இராணுவத்தினர் வசம் 41 இடங்களும் கடற்படையினர் வசம் 59 இடங்களும் பொலிசார் வசம் 20 இடங்களும் உள்ளன.



போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் நிலங்களை மட்டுமன்றி வீதிகளைக்கூட விடுவிக்க படையினர் மறுக்கின்றனர். குறிப்பாக கட்டுவன் அச்சுவேலி வீதியைத் திறந்து விடுவதன் மூலம் பல ஆயிரம் பேரின் போக்குவரத்திற்கு உதவ முடியும் என 10 ஆண்டுகளாக கோருகின்ற போதும் இராணுவம் அதற்கு மறுக்கின்றது. இதனால் 10 கிலோ மீற்றர் பயணிக்க வேண்டிய மக்கள் 35 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும் அவலம் இடம்பெறுகின்றது.

வலி. வடக்கில் இருந்து 1990-06-15 அன்று மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமத்தின் ஏனைய பகுதிகளின் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த சிறுவர்களும் அதன் பின்பு பிறந்தவர்கள்கூட திருமணமாகி தனியான குடும்பங்களாக இருக்கும் நிலையில் அவர்களை தொடர்ந்தும் முகாம்களில் தங்க விட்டால் முகாம் வாழ்வு அவலம் தொடர்கிறது என்ற சர்வதேச அழுத்தம் தொடரும் எனக் கருதிய அரசு, குடும்பத்திற்கு 2 பரப்புக் காணியை கொள்வனவு செய்து வழங்கி இந்தப் பிரச்சனையைத் தீர்ப்போம் என முயல்கிறது.

**Details of Land Occupied by Navy Jaffna District**

| S.No | DS Division | No of Locations and Extent (Acre) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Private | No of Owners | Extent | State | Extent | Total | Extent |
| 1 | Delft | 6 | 15 | 12.00 | 4 | 4.05 | 10 | 16.05 |
| 2 | Karainagar | 7 | 22 | 32.99 | 4 | 20.42 | 11 | 53.41 |
| 3 | Kayts | 5 | 4 | 3.69 | 5 | 0.87 | 10 | 4.56 |
| 4 | Velanai | 15 | 80 | 53.80 | 10 | 9.70 | 25 | 63.50 |
| 5 | Sandilipay | 5 | 5 | 19.10 | 0 | 0 | 5 | 19.10 |
| 6 | Chankanai | 3 | 7 | 17.64 | 2 | 1.50 | 5 | 19.14 |
| 7 | Maruthankerny | 17 | 25 | 13.52 | 6 | 8.71 | 23 | 22.23 |
| 8 | Jaffna | 0 | 0 | 0 | 1 | 0.06 | 1 | 0.06 |
| 9 | Point Pedro | 0 | 0 | 0 | 1 | 0.68 | 1 | 0.68 |
| 10 | Tellippalai | 1 | 0 | 62.00 | 2 | 154.00 | 3 | 216.00 |
| | Total | 59 | 158 | 214.74 | 35 | 199.99 | 94 | 414.73 |

இராணுவமும், கடற்படையும் இவ்வாறெனில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சிவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பொலிசாரும் நில அபகரிப்புச் செய்யத் தவறவில்லை. இவர்களும் வலி வடக்கில் இராணுவம் விடுவித்த பிரதேசத்தில் மட்டும் 31 ஏக்கர் உட்பட குடாநாடு முழுவதும் 20 இடத்தில் 45 ஏக்கர் நிலங்களை உரிமையாளர்களின் சம்மதம் இன்றியே தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளனர். இதில் பல பொலிஸ் நிலையங்களும் உள் அடங்குகின்றன.

இவ்வாறு மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் படைக் கட்டுப்பாட்டில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூலம் இன்றும் தோட்டச் செய்கையில் ஈடுபடுவதற்காகவே பெரும்பகுதி நிலங்களை ஒதுக்கியுள்ளனர். அதாவது எவரின் நிலத்தில் உணவு உற்பத்தி இடம்பெறுகின்றதோ அவர்களிற்கே அதை விற்பனை செய்யும் அவலம் இடம்பெறுகின்றது.

இதேபோன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை திறப்பதாக 2019இல் சர்வதேசத்திற்கு படம் காட்டிய பின்பு இழுத்து மூடப்பட்ட விமான நிலையத்தைச் சூழ உள்ள மக்களிற்குச் சொந்தமான நிலங்களை விடுவிக்க மறுக்கும் படைத் தரப்பு விமான நிலைய கட்டிடத் தொகுதிகள் அமைக்க என்ற பெயரில் அதாவது வரி விலக்கு கடைகளை அமைப்பதற்காக தெற்கின் தனவந்தர்களிற்கு இடத்தை வழங்க தற்போது திட்டமிடப்படுகின்றது.

அவ்வாறான விமான நிலைய கட்டடத் தொகுதியை அந்த நிலத்தின் உரிமையாளரிடம் தாருங்கள் என்றால் அதனை அமைக்கும் வல்லமை இந்த நில உரிமையாளர்களிடம் இல்லை என்ற கூற்றின் மூலம் மறுத்து அந்த நிலம் தெற்கின் பண முதலைகளிற்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

**PRIVATE LAND OCCUPIED BY ARMY IN JAFFNA DISTRICT**

| No | DS DIVISION | PRIVATE LAND | |
|---|---|---|---|
| | | No of Land lot | EXTEND (ac) |
| 1 | Chankanai | 1 | 1.47 |
| 2 | Chavakachcheri | 5 | 80.88 |
| 3 | Jaffna | 7 | 1.42 |
| 4 | Karainagar | - | - |
| 5 | Karaveddy | 1 | 5.82 |
| 6 | Velanai | - | - |
| 7 | Kopay | 3 | 6.14 |
| 8 | Maruthankerny | 4 | 301.09 |
| 9 | Nallur | 1 | 8.66 |
| 10 | Pointpedro | 3 | 22.52 |
| 11 | Sandilipay | 1 | 0.6 |
| 12 | Tellipalai | 15 | 1745.24 |
| | Total | 41 | 2173.84 |

இதேபோன்றே விமான நிலையத்திற்கான பாதை அமைந்துள்ள கட்டுவன் மயிலிட்டி வீதியில் 400 மீற்றர் நீளத்திற்கு 8 ஏக்கரை விடுவிக்க மறுத்து வீதியை இராணுவம் அபகரித்து வைத்துள்ளது. அந்த வீதிக்குப் பதிலாக தற்போது தனியாரின் காணி ஊடாக சட்ட விரோத வீதி அமைத்துள்ளனர்.

இவற்றையும் தொடர் போராட்டங்கள் மூலம் மட்டுமே பெற முடிந்தமையினால் இனியும் மௌனம் காப்பது வேலைக்கு ஆகாது என்ற முடிவிற்கு மக்கள் தள்ளப்பட்டு அடுத்த கட்ட போராட்டம் பற்றி சிந்திக்கின்றனர்.




யாழ். நகரில் Hotel விற்பனைக்குண்டு

யாழ். நகரில்
SKY LIGHT QUEST
Inn Hotel
விற்பனைக்குண்டு



3 Triple rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (attached bathroom)
3 Single rooms (attached bathroom)
3 Single rooms (outside bathroom)
2 Double rooms (with kitchen, hall and bathroom)

7 வருடங்கள், யாழ். நகரில் இருந்து 1Km தூரத்தில் பலாலி வீதியில், இல. 1, 2nd Lane, Palaly Road, Jaffna வில் போதிய வருமானத்துடன் நல்ல பராமரிப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கும் Hotel விற்பனைக்குண்டு.

Google இல் சென்று SKY LIGHT Quest Inn, Jaffna என்று பார்வையிடுவதன் மூலம் எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை 7,50,000$ (கனடிய டொலரில்)

மேலதிக விபரங்களிற்கு 94 77 059 6776

94 76 022 6746 இல் whatsapp ல் தொடர்பில் கொள்ளலாம்.

# தீவிரமடையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம்

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையில் போர் முடிந்து 13 ஆண்டுகள் ஆனாலும், போரின் இறுதி கட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட, சரணடைந்த அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை குறித்த கவலைகளும், கேள்விகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.

அரசு அதற்கான உரிய பதிலைக் கூறாமல், காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் என்ற அமைப்பை ஏற்படுத்தி உள்நாடு மற்றும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வருகிறது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ளது.



நாடாளுமன்ற தீர்மானம் ஒன்றின் மூலம் உருவாக்கப்பட்ட ஓ எம் பி எனப்படும் அலுவலகம் "ஒன்றிற்கும் உதவாத அலுவலகம்" என்ற அவப்பெயரைச் சம்பாதித்துள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள் கையளிக்கப்பட்டும், சரணடைந்தும், வலிந்து காணாமலும் காணாமலும் ஆக்கப்பட்டிருந்த சூழலில், அந்த அலுவலகம் ஒருவரைக் கூட இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

ஆனால், கோத்தாபய அரசாங்கமும் அதற்கு அடுத்து வந்த ரணிலின் ஆட்சியும் உண்மையைக் கண்டறிந்து அதைத் தெரிவிப்பதற்குப் பதிலாக "அற்பக் காசாக" இரண்டு லட்சம் ரூபாய் பணமும், மரணச் சான்றிதழும் அளிக்கவே முனைப்பாகச் செயல்படுகின்றன என்று காணாமல் போனவர்களின் உறவினர்கள் கோபாவேசமாகக் கூறுகின்றனர்.

வயது போன தாய்மார்கள் தலைமையில் காணாமல் போனவர்களைக் கண்டறியும் போராட்டம் 2000 நாட்களைக் கடந்தும் வலுக் குறையாமல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை (31) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பமானது. இதன்போது நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கலந்து கொண்ட நிலையில் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கொட்டும் மழைக்கு மத்தியிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டநிலையிலேயே திடீரென மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்துக்குள் உள்நுழைந்தனர்.

ஆனால், அந்த சமயத்தில் நீதி அமைச்சர் அங்கு இல்லை. எனினும், நீதி அமைச்சர் அங்கு இல்லாத நிலையிலும் நடமாடும் செயலமர்வு இடம்பெற்றது.

பொலிசார் போராட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கு முயற்சித்த போதும் அது பலனளிக்காத நிலையில். ஒரு மணி நேரம் வரை மாவட்ட செயலக கேட்போர் கூடத்துக்குள் கோஷம் எழுப்பிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

பின்னதாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நடமாடும் செயலமர்வு அலுவலகத்தின் முன்பாகவும் சென்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"ஓ எம் பி வேண்டாம், சர்வதேச நீதி விசாரணையை மட்டுமே நாங்கள் கோருகிறோம், இரண்டு லட்சம் லஞ்சம் வேண்டாம், நீதி அமைச்சரே வெளியேறு, விஜயதாச ராஜபக்சவே வெளியேறு" என கோ'ம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.



# ஈழத்துத் திருக்கோவில்கள்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் திருகோணமலை

"குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்"

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலுக்கு மேலும் ஒரு தனிச்சிறப்புண்டு. கருவறையிலே வேலும், லிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதுதான் அந்தச் சிறப்பு. அருபியாகவுள்ள இறைவனை அருவுருவமாகிய லிங்க வடிவிலும், உருவமாகிய வேல் வடிவிலும் இந்த ஆலயத்திலே பிரதிஷ்டை செய்துள்ளார்கள். இதனை நோக்கும்போது, பெயரிலே முருகன் கோயிலாகத் திகழ்ந்தாலும், இக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் லிங்கமும், தங்கவேலும் ஒருங்கே அமையப் பெற்ற தோற்றச்சிறப்பானது சிவனே குகன், குகனே சிவன் என்னும் தார்ப்பரியத்தை விளக்குவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான அமைப்புடன் கூடியதாக இக்கோயிலொன்றே ஈழத்தில் காணப்படுகின்றது.

இவ்வாறாக இக்கோயிலின் கருவறை அமைய பல சம்பவங்கள் காரணமாக விளங்கியுள்ளன. அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலின் ஆதி வரலாற்றை அறிவதன் மூலம் இதன் காரணத்தைப் புரிய முடியும். கி.பி 1800 ஆம் ஆண்டளவில் குழியொன்றிலிருந்து தோன்றிய தங்கவேலினைச் சடையர் என்னும் பண்டாரசாது கண்டெடுத்தார். இப்பெரியவர், குடிசைக்கோயிலொன்றினை அமைத்து அவ்விடத்திலே தங்கவேலை நிறுவிப் பூசித்து வந்தார். இவரின் பின் செல்லையாபிள்ளை என்னும் பெரியார் குடிசைக்கோயிலைப் பெரிய கோயிலாகக் கட்டி வேலைப் பூசித்து வந்துள்ளார். இவரின் மறைவுக்குப் பின் அக்காலத்தே வாழ்ந்த முருக பக்தரும், பெரும் செல்வந்தருமாக விளங்கிய மாடிவீட்டுச் சண்முகம்பிள்ளை என அழைக்கப்பட்ட திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள், தங்கவேல் நிறுவப்பட்டிருந்த ஆலயத்தை ஆதரித்து வழிபாடு செய்து வந்தார்.

இவ்வாறான சூழ்நிலையில் காசியிலிருந்து வந்த சந்நியாசி ஒருவர் தான் வழிபாடு செய்த சிவலிங்கத்தைத் திரு. சண்முகம்பிள்ளையவர்களிடம் அளித்து, தங்கவேல் அமைந்திருந்த ஆலயத்தில் சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்யுமாறு வேண்டிக் கொண்டார். முருகனின் வேல் எழுந்தருளியுள்ள ஆலயத்தில் எவ்வாறு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வது என மனதுள் எண்ணிக்கொண்டாலும், சந்நியாசியின் வேண்டுகொளை மறுக்க மனமில்லாது ஏற்றுக் கொண்டார். முருக பக்தனாகிய தனக்கு இவ்வாறான ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுவிட்டதே எனப் பலவாறாகக் கலக்கமுற்றார். அன்றிரவு இவருடைய கனவிலே இறைவன் தோன்றி, "இந்த லிங்கத்தை ஏற்றுக்கொண்ட உனக்குச் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்." என்று கூறி, லிங்கத்தைத் ஸ்தாபிப்பதற்குரிய மூலஸ்தானம் இதுதானென்று கனவிலே நிறுவப்படவேண்டிய இடத்தையும் அருளியதோடு, ஏனைய பரிவார மூர்த்திகள் அமைய வேண்டிய இடங்களையும், தீர்த்தக்கேணி அமைய வேண்டிய இடத்தையும் கனவிலே காட்டியுள்ளார். அடுத்தநாட் காலையில் இறைவன் இட்ட கட்டளைப்படி சென்று பார்த்தபோது கனவிலே கண்ட அடையாளங்கள் யாவும் சற்றும் பிசகின்றிக் காணப்பட்டன.

இறைவனுடைய பெருங்கருணையை எண்ணிப் பரவசமடைந்த திரு. சண்முகம்பிள்ளை அவர்கள், இறைவன் கனவிலே இட்ட கட்டளைக்கிணங்க, ஆலயத்திருப்பணி வேலைகளைத் தொடங்கினார். திருப்பணி வேலைகள் பூர்த்தியாகிக்கொண்டிருக்கும்போதே தீர்த்தக் கிணற்றையும் வெட்டுவித்தார். திருப்பணிவேலைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய பணவசதியின்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். நம்பினார் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு என்பதற்கிணங்க, கனவிலே இறைவன் தோன்றி, தீர்த்தக் கிணற்றை இன்னும் ஆழமாக வெட்டும்படி அருளியுள்ளார். அவ்வாறே தீர்த்தக் கிணற்றை ஆழமாக அகழ்ந்தபோது, அங்கே திரவியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு கிடைத்த திரவியத்தைக் கொண்டு ஆலயத்தில் நிறுவப்படவேண்டிய மூர்த்திகளையும், மூர்த்திகளுக்குரிய ஆபரணங்களையும் செய்வித்து, காசியிலிருந்து சந்நியாசியாரால் கொண்டு வரப்பட்ட லிங்கத்தை ஸ்தாபித்து, லிங்கத்தோடு தங்கவேலையும் பிரதிஷ்டை செய்து, கி.பி 1889 ஆம் ஆண்டு ஆனிமாதம் 10 ஆந் திகதி மகா கும்பாபி'கத்தை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

திரு. சண்முகம்பிள்ளை அவர்களுடைய காலத்திற்குப் பின் அவருடைய மருகர் திரு. அம்பலவாணரும், இவருக்குப் பின் இவருடைய மருகர் திரு. நவரெட்ணம் அவர்களும் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோவிலைப் பராமரித்து வந்துள்ளனர். திரு. நவரட்ணத்தின் பின்னர் அவருடைய மூத்த மகனான திரு. இ. இராஜவரோதயம் அவர்கள் (முன்னாள் திருகோணமலைப் பராளுமன்ற உறுப்பினர்) ஆலய அறங்காவலர் உரிமையுடையோராக விளங்கினார். ஆயினும் வயதிலே இளையவராக இருந்த காரணத்தினால், உரிய பராயமடைந்து ஆலய அறங்காவலர் பொறுப்பை ஏற்கும்வரை. இவரது மாமனார் திரு. செ. லிங்கரெட்ணம் அவர்கள் ஆலயத்தைப் பராமரித்து வந்தார். இவருடைய காலத்திலே கி.பி 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாந்திகதி இவ்வாலயத்தில் இரண்டாவது கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேறியது.

*வளரும்...*

# இவ்வார ராசிபலன்

**04-11-2022 வெள்ளி தொடக்கம் 10-11-2022 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையக்கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன் பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீர்கள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோஷம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்பம் வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P

*(தொடர்ச்சி ___ பக்கம்)*

# இவ்வார ராசிபலன்

(___ பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,U




**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வாழ்த்துக்கள் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறருக்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,U




# அன்பின் தொனி - 669

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**1. விக்கிரகங்களிடம் ஜெபம் ஏறெடுத்தல்** - Prayers to idols

நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள், அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்றார். - **நியாதிபதிகள் 10: 14**

அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள் என்றான். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள், ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். மத்தியானவேளையிலே எலியா அவாகளைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள், அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான், அல்லது அலுவலாயிருப்பான், அல்லது பிரயாணம் போயிருப்பான், அல்லது தூங்கினாலும் தூங்குவான், அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான். அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள். மத்தியானவேளை சென்றபின்பு, அந்திப்பலிசெலுத்தும் நேரமட்டாகச் சன்னதம் சொல்லிக்கொண்டிருந்தார்கள், ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை, கவனிப்பாரும் இல்லை. - **1 ராஜாக்கள் 18: 25-29**

அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான், ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலிமரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான், அல்லது அசோகமரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான், நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான், அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங் காய்ந்து: ஆஆ, அனலானேன், நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து, அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்கவேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். - **ஏசாயா 44: 14-17**

பையிலிருக்கிற பொன்னைக்கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக்கொள்ளு கிறார்கள், அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான், அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள். அதைத் தோளின் மேல் எடுத்து, அதைச் சுமந்து, அதை அதன் ஸ்தானத்திலே வைக்கிறார்கள், அங்கே அது நிற்கும், தன் இடத்தை விட்டு அசையாது, ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறுஉத்தரவு கொடுக்கிறதுமில்லை, அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை. - **ஏசாயா 46: 6-7**

**2. மனிதரை பலிகொடுத்தல்** - Human sacrifices

உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக, கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட் டெரித்தார்களே. - **உபாகமம் 12: 31**

உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக, கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட் டெரித்தார்களே. - **2 நாளாகமம் 28: 2-4**

அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள், அவைகள் அவர்களுக்குக் கண்ணியாயிற்று. அவர்கள் தங்கள் குமா ரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள். அவர்கள் கானான்தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள் குமாரர் குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள், தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது. - **சங்கீதம் 106: 36-38**

நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைகளைச் கொன்றுபோடுகிறவர்கள். பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது அவைகள், அவைகளே உன் வீதம் அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து, போஜனபலியையும் செலுத்துகிறாய் இவைகளின்மேல் பிரியப்படுவேனோ? - **ஏசாயா 57: 5-6**

யூதா புத்திரர் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், என் நாமம் தரித்திருக்கிற ஆலயத்தைத் தீட்டுப்படுத்தத் தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள். தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோடும் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடை-களைக் கட்டினார்கள், அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவு மில்லை. - **எரேமியா 7: 30-31**

**தொடரும்...**



# எம்மை விட்டுப்பிரிந்த தெய்வத்தின்
# 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
26-01-1929



விண்ணில்:
04-11- 2007

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்து வந்தவருமான

## அமரர் சத்தியசீலன் செல்லத்துரை

அவர்களின் 15ம் ஆண்டு நினைவாஞ்சலி.
(முன்னாள் முறைமுக அதிகாரசபை ஊழியர், கொழும்பு)

பதினைந்து ஆண்டு காலம் எப்படியோ ஓடியது
எதுவும் பேசாமல் எமைவிட்டுப் பிரிந்து
காலனோடு கைகோர்த்துச் சென்றீர்கள்
கலங்கிய இதயங்களை எமக்கு தந்துவிட்டு..

என்றும் நீங்கள் எம்மோடு வாழ்வீர்கள் என்று
எப்போதும் எண்ணியிருந்தோம் இறுதியில் ஏமாந்தோம்
நீங்கள் மறைந்ததனால் நாங்கள் கருகிய புற்களானோம்
கலங்கிய நீரோடையானோம். இயங்காத இயந்திரமானோம்
இலைகள் உதிர்ந்த மரங்கள் ஆனோம்
எமக்காய் வாழ்ந்தவரே உம் வாழ்வைத் தொலைத்தீரோ
எத்தனையோ ஆசைகளை இடையில் துறந்தவர் நீர்
அர்ப்பணிப்பு என்பதற்கு அடையாளம் நீங்கள் தான்
அன்பரே உங்கள் அன்பு எமக்குத் தேவை
அருகில் இருத்தலும் எமக்கும் ஆறுதலைத் தரும்
நம்பியிருந்தோம் அது நிறைவேறவில்லை
நற்றாற்றில் கவிழ்ந்த படகு போல் எங்கள்
இதயங்கள் துன்பத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து வெடிக்கின்றன.
என்றென்றும் நெகிழ வைக்கும் நின் பணி
தலைமுறைக்கும் தொடரட்டும்.



**உங்கள் பிரிவால் துயருறும்**

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உதயம் 1387 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 4, 2022

# இலங்கையில் மாவிட்டபுரம் ஊரியவத்தை ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான புணருத்தாரன நிதிக்காக ‘முத்துத் தேடல்’ பக்தி இசைத் தட்டு வெளியீட்டு விழா




யாழ்ப்பாணம். மாவிட்டபுரம் ஊரியவத்தை ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான புணருத்தாரன நிதிக்காக நடத்தப்பெறும் ‘முத்துத் தேடல்’ பக்தி இசைத் தட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 05-11-2022 சனிக்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு ஸ்காபுறோவில் இடம்பெறவுள்ளது.

ஸ்காபுறோ நகரில் மார்க்கம்-நக்கட் சந்திப்புக்கு அருகில் **430 Nugget AVENUE** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **The Estate Banquet & Event Centre** மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக ‘இன்னிசை வேந்தர்’ பொன் சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்.

மேற்படி பக்தி இசைத் தட்டில் உள்ள பாடல்கள் அனைத்தையும் கவிஞர் வாணிதாசன் எழுதியுள்ளார் என்பதும் இசையமைப்பிற்கு பொறுப்பாக தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கடம் வித்தகர் உமாசங்கர் பணியாற்றியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு:- வசீகரன்- 416 829 2364 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 2022 — 2023 காலப்பகுதிக்கான புதிய பணிப்பாளர் சபை

கடந்த 29-10-2022 சனிக்கிழமை அன்று கனடா ஸ்காபுறோ நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் நடைபெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 2022-2023 காலப்பகுதிக்கான பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் கூட்டத்தில் போட்டிகள் எதுவுமின்றி புதிய பணிப்பாளர்கள் சபை தேர்ந்தெடுக்கப்பெற்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். அந்த பெயர் மற்றும் பதவி விபரங்கள் இங்கே காணப்படுகின்றன.

**President: Vina Devadas**
**Executive VP: Murali Sivaguru**
**VP Internal Affairs: Ari A. Ariaran**
**VP Finance: Leonard Selvaratnam**
**VP Membership: Poorany Sornabala**
**VP Community Relations: Thipan Raj**
**Director: Gowthami Thanancheyan**
**Director: Kanchana Thuraisingham**
**Immediate Past President: Santha Panchalingam**

# Young Tamil Canadian Brothers owned S & B Pallets in Scarborough, celebrated its 29th Anniversary




கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் தமிழர் நிறுவனமான **S & B Pallets** நிறுவனம் தனது 20வது வெற்றிகரமான ஆண்டை அண்மையில் பூர்த்தி செய்தது முகமாக பணியாளர்கள் நண்பர்கள் சகிதம் கொண்டாடி மகிழ்ந்தது. வாழ்த்துக்கள் சகோதரர் விஜேய் கோணேஸ்வரன் மற்றும் அவரது அன்புச் சகோதரர்கள் அனைவருக்கும். கனடா உதயன் நிறுவனம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

# ஸ்காபுறோ ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்த்தான குருசாமி சுப்பிரமணியம் அவர்களின் பிறந்த தின வைபவம்



கனடாவில் ஐயப்ப வழிபாட்டையும் ஐயப்ப வழிபாட்டின் அற்புதங்களையும் பலன்களையும் மிக நீண்ட காலமாக பேணி வருபவரும் நேர்த்தியான தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவருமான ஸ்காபுறோ ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்த்தான குருசாமி .சுப்பிரமணியம் குருசாமி இந்திராம்மா ஆகியோரின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் வாழ்த்துக்கள் வழங்கும் சிறப்பு நிகழ்வு பக்தி சூழ இடம்பெற்றன.

ஆலய பக்தர்கள் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்கள் ஆகியோர் மிகுந்த ஆர்வத்துடனும் அன்புடனும் மேற்படிநிகழ்வில் கலந்து சிறப்பித்ததுடன் தங்கள் வாழ்த்துக்களை ஐயப்ப குருசாமி தம்பதிக்கு தெரிவித்து மகிழ்ந்தனர்.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஷ் சுவிற்சலாந்தில் "நிறைதமிழ்" பட்டம் வழங்கப்பெற்று கௌரவிக்கபட்டார்



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவரும் எழுத்தாளரும் கவிஞருமான அகணி சுரேஷ் அவர்களுக்கு சுவிற்சலாந்தில் “நிறைதமிழ்“ பட்டம் வழங்கப்பெற்றது. சுவிற்சர்லாந்தில் சூரிச் மாநிலத்தில் கணிதக் கற்கை நெறி மையத்தின் நிறுவன அதிபர் மகேந்திரன் அவர்களின் தலைமையில்,கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஷ் அவர்களின் நூல்கள்,பாடல்கள் என்பவற்றின் அறிமுக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. (தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL

COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136